Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது மாசி 14 ஆம் நாள் ஷவ்வால் 1 (26-2-63) செவ்வாய்க்கிழமை இதழ் 18

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணாடி விற்பனையாளரும்
45,மெயின்வீதி, : யாழ்ப்பாணம்

# எதிரிதரப்பு ஆட்சேபம் நிராகரிக்கப்பட்டது

## 'வாக்குமூலபிரதிகளை எதிரிகளுக்கு வழங்க வேண்டும்'

### சதி வழக்கு விசாரணையில் வழக்கறிஞர் ஜி. ஜி. கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

சதிவழக்கை விசாரணை செய்வதற்கு, இப்பொழுது விசாரணை நடத்தி வரும் விசேஷ நீதிமன்றத்துக்கு சட்டரீதியாக அதிகாரமில்லை என்று எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் எழுப்பிய ஆட்சேபனைகள் யாவற்றையும் நேற்றுக்கூடிய விசேஷ நீதிமன்றம் நிராகரித்தது. கிரிமினல் விசேஷசட்ட மசோதா, சட்டரீதியானதே என்ற அடிப்படையிலேயே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

எதிரிகள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கு முன்னர், சாட்சிகளின் வாக்குமூலங்களினதும், எதிரிகள் அளித்த வாக்குமூலங்களினதும் பிரதிகளை அவர்களுக்கு கொடுக்கவேண்டுமென எதிரிதரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நீதிமன்றத்தைக்கேட்டார். அதற்கான தீர்ப்பளிப்பை நீதிமன்றம் ஒத்திவைத்தது.

நேற்று சதிவழக்குவிசாரணைகள் மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் நடைபெற்றபோது, எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் கிளப்பிய நீதிமன்றத்தைப் பற்றிய சட்டப்பிரச்சினைகள்யாவும் நிராகரிக்கப்பட்டன. கிரிமினல்சட்ட விஷேசமசோதா சட்டரீதியானதுதான் என்ற அடிப்படையிலேயே ஆட்சேபனைகள நிராகரிக்கப்பட்டன. ஆட்சேபனைகள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை நீதியரசர்பெர்ணன்டோ வெளியிட்டார்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இரு சந்தேகநபர்களான மேஜர் லோயலாவும், காப்டன் ஜெயக்கொடியும் கோர்ட்டுக்கு கொண்டு வரப்பட்டார்கள். மேஜர் லோயலா தள்ளுவண்டியிலும் காப்டன் ஜெயக்கொடி 'ஸ்றெட்ஸ'ரிலும் கொண்டுவரப்பட்டனர். நீதிமன்றத்தின் அதிகாரம்பற்றி தனது சார்பில் ஆஜரான வழக்கறிஞர் சமர்ப்பித்த ஆட்சேபனையை தான் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருப்பதாக மேஜர் லோயலா நீதிமன்றத்தாருக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

எதிரிகள் தங்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றஞ்சாட்டுகளுக்கு பதிலளிக்க அவர்களை அழைப்பதுபற்றி சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திடம் நீதியரசர் திரு. சஸ்சோனி வினவினர். எதிரிகள் பதிலளிப்பதற்கு அழைக்கப்படுவதற்கு முன்னர்தான் ஒரு சட்டப்பிரச்சனையை கேட்கவிரும்புவதாக திரு. ஜி ஜி பொன்னம்பலம் பதிலளித்தார். சாட்சிகளினதும், எதிரிகளினதும் வாக்குமூலங்களின் பிரதிகளை எதிரிகளுக்கு கொடுக்கவேண்டும் என ஜி. ஜி. நீதிமன்றத்தைக் கேட்டார். இதற்காக அவர் அதிகநேரம் வாதாடினர். ஜி. ஜியின் வாதத்திற்கு பதிலளிக்கையில், சட்டப்படி வாக்குமூலப் பிரதிகளை எதிரிகளிடம் கொடுக்கமுடியாதென்று கூறி அட்டோர்ணிஜெனரல வாதாடினர். இருதரப்பாரும் வாதிட்டபின்னர் இப்பிரச்னைக்கு தீர்ப்பளிப்பதை நீதிமன்றம் ஒத்திவைத்தது.

ஐ. நா. மனித உரிமை சாசனத்தின் பதினொராவது சரத்துப்படி, ஐ. நா. அங்கத்துவ

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மேயர் ராஜினுமா?

### ஆனுல் மேலிடத்திற்கு கடிதம் அனுப்பப்படவில்லை

யாழ்ப்பாணம், [illegible]வாய்

யாழ்ப்பாணம் மேயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் கடந்தவருடம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் தமது தலைமைப் பதவியை ராஜினுமாச் செய்துள்ளார். அவரது ராஜினுமாக் கடிதம் இன்னும் மேலிடத்துக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்று தெரிகிறது.

டாக்டர்எஸ்.ஏ. தருமலிங்கம் தமது மேயர்பதவியை ராஜினுமாச்செய்யும் கடிதத்தை, தம்மைப் பதவிக்குக் கொண்டு வந்தவர்களின் கையில் ஒப்படைத்திருக்கிருர். டாக்டர் தர்மலிங்கத்தைப் பதவிக்கு கொண்டுவந்தவர்கள் மத்தியில் மேயரின் ராஜினுமாக் கடிதத்தை மேலிடத்திற்கு அனுப்பிவைப்பதா இல்லையா என்ற புதிய பிரச்னை ஒன்றுதோன்றியுள்ளது. இப் பிரச்சனைகாரணமாகத்தான் மேயரின் ராஜினுமாக் கடிதம் ஒப்படைப்பதில் ஒருவார காலமாகத் தாமதம் ஏற்பட்டுவருகிறது.

(8-ம் பக்கம்பார்க்க)

## "சகோதரத்துவமும் அன்புமே இஸ்லாமிய பண்பாடு"

### முஸ்லிம் பிரமுகர்களின் ரம்ழான்தின செய்திகள்

இஸ்லாமிய மக்கள் சகோதரத்துவத்தை வளர்த்து அன்புடன் வாழ்வதுவே இஸ்லாமிய பண்பாட்டு முறைக்கு ஏற்றது என யாழ். மாநகர சபை அங்கத்தவர் ஹாஜி. வி. எம். எம். அபு சாலிஹ் ஜே. பி. தமது ரம்ழான் தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய பண்பாட்டு முறையில் சகோதரத்துவமும் சகிப்புத்தன்மையும் முக்கிய அம்சங்களாக விளங்குகின்றன மாக்களாக வாழ்ந்த மக்கட் சமுதாயத்தின்கண்ணே அவதரித்த அண்ணல் மாநபி(ஸல்) அவர்கள் மாக்களை-பண்புமிகு மக்களாக ஆக்கி அவர்களிடையே சகிப்புத்தன்மையையும் சகோதரத்துவத்தையும் நிலவவிட்டனர். இத்தகைய பாக்கியமொன்றே அன்று தொட்டு இன்றுவரை கடைப்பிடிகக்ப்பட்டுவருகின்ற தென்பது மறுகக்முடியாததன்றே.

இஸ்லாம் மார்க்கம் உயர்ந்தோன்-தாழ்ந்தோன், ஏழை-பணக்காரன், எஜமான்-அடிமை என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் ஒன்றுகூடி ஆண்டவனை வணங்குதலையே விரும்புகின்றது. அன்ருடத் தொழுகையிலும் குறிப்பிடத்தக்கதான வெள்ளிககிழமை கொத்பாவிலும் முஸ்லிம் மககள் எந்தவித வேறுபாடுமில்லாமல் தங்களில் ஒருவரைத் தலைவராகத் தெரிந்து அவரது ஆணைப்படியே ஒழுகுகின்றனர். நமது சகோதரத்துவத்தின் தன்மை நாம் கண்ணுல்காணக கூடியதாக இருககிறதல்லவா?

இஸ்லாமிய கலாசாரத்தின் இன்னெரு முககிய பண்பு சகிப்புத்தன்மை. இஸ்லாம் பரவிய அககாலத்திலும்,அதன் முன்னேற்றமான இககாலத்திலும் முஸ்லிம்களிடையே சகிப்புத்தன்மை வெகுவாக அமைந்துவருகின்றது. பிற்காலத்தில் தோன்றிய முஸ்லிம் தலைவர்கள் மதவெறியால் பிற மதத்தவர்களைத் துன்புறுத்தியிருககிருர்கள். ஆனுல் இஸ்லாமிய சாம்ராச்சியத்திலே இவ்வகையான சம்பவங்கள் நிகழவில்லை என்பது உறுதி. நமது மார்ககம் சாந்திநிலவுவதாக இருககட்டும். அதனுல் பிறமதத்தவர்களை துன்புறுத்தவோ அல்லது பரிகாசம்செய்வதோ முறையல்ல. இவ்வித இழிசெயலை நம் இஸ்லாமிய சமுதாயம் செய்யவில்லை. செய்யவும் அம்மார்ககம் விழையவில்லை.

இபபுனித நன்நாளில் இஸ்லாமிய சகோதரராகிய நாம் சகோதரத்துவம், சகிப்புத்தன்மை, சாந்தி, அன்பு என்ற பண்புகளை நம் வாழ்வில் கடைப்பிடித்து,இஸ்லாம் தந்தருளிய புனித திருககுர்ஆன் வழிநடந்து சீரிய முறையில் வாழ்ந்து உயர்நிலை அடைவோமாக.

ஈதுல் பித்ரி தினத்தைமுன்னிட்டு முன்னைநாள் யாழ்ப்பாண மேயரும் தற்பொழுது யாழ் மாநகரசபை அங்கத்தவராக இருப்பவருமான திரு. எம். எம். சுல்தான் மக்களுக்கு விடுத்துள்ள செய்தி வருமாறு:-

இந்நன்ஞள்உலகமுஸ்லிம்மக்களனைவருக்கும் ஒரு மகத்துவமான திருநாளாகிய இந்நாளில் தான் இறைவன் புனித றம்ழான் மாதத்தில் நோன்பு நோர்த்து தருவிஹ் முதலிய வணக்கங்களில் ஈடுபட்ட முஸ்லிம்களுக்குத் தன்னுடைய அருளைச் சொரிகின்ருன். இந்நாள் ஈதுல்பித்ரி என்று வழங்கப்படுவதின் காரணம் 30 நாள் நோன்பு நோத்துஷவ்வால் பிறைகண்டதும் நோன்பை விட்டும் பெருநாளைக் கொண்டாடுவதாலும் அன்று சதக சத்கல பித்ரி என்றும் தானதர்மம் கொடுப்பதனுலேயும் இப்பெயர் வழங்கப்படுகிறது. இந்நன்ஞள் கொண்டாடுவதன் முக்கிய நோக்கம் றம்ளான் மாதத்தில் தான் திருக்குஆர் மக்களுக்கு நேர்வழிகாட்டும்டு பொ

(5ம் பக்கம்பார்க்க)

## எமது வாழ்த்துக்கள்

ஈழநாடு இஸ்லாமிய வாசக நேயர்களுக்கு எமது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

ஈத்முபாரக்.

## வரி விளம்பரம்

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. **வைத்தியர் பரிபூரணானந்தர்** வைளாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### அடைவு நகை ஏல விற்பனவு

தொல்புரம் இ. துரையப்பா அன் சன்ஸ் அவர்களின் அடைவு கடையில் 1-1-61 முதல் 31-12-61 வரையில் அடைவு வைத்து மீட்கப்படாத நகைகளை 27-3-63 புதன்கிழமை முற்பகல் 8 மணி முதல் மேற்படி கடையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்கப்படும். ந. ஆறுமுகம், வெந்தீஸ்மேஸ்கர், சித்தங்கேணி. 731

### விற்பனைக்கு

வரணி — தாவளை இயற்றாலையில் பிரசித்தி பெற்ற கல்வளைப் பிள்ளையார் கோவிலுக்கு மிக அண்மையில் 20 ஏக்கர் நிலம் தென்னைச் செய்கைக்கதகுந்தது. விபரம் கீழ்க்காணும் விலாசத்தில் அறியலாம்: சி. நல்லமாப்பாணர், இளைப்பாறிய உடையார், மந்துவில். 730

## சிவராத்திரி விழா

நல்லூர் தெற்கு ஸ்ரீகற்பக விநாயகராலய சிவராத்திரி உற்சவவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நான்கு ஜாமங்களிலும் விசேட ஆராதனையுடன் கரக ஆட்டம் நாதஸ்வரக்கச்சேரி, சங்கீதக் கச்சேரி, கதாப்பிரசங்கம் சொற்பொழிவுகள் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### சாந்தையர் மடம்

ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனையுடன் சிவராத்திரி விழா ஆரம்பமானது. நான்கு ஜாமப் பூசைகளும் விசேடமாக நடைபெற்றன. அன்று இரவு 7மணி முதல் சமயப் பிரசங்கமும் பக்திப்பாடல்களும் நடைபெற்றன. சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி, திரு. க. முருகேசு, திரு. பொ. ஜெகந்நாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### தொல்புரத்தில்

தொல்புரம் ஆதிமுக்து மாரிஅம்மன் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினம் பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்பட்டது. மாலை நேரத்தில் தொல்புரம் மத்திய சனசமூக நிலைய அங்கத்தினர்கள் கூட்டுப் பிரார்த்தனை, பஜனை நடத்தினர். அமாவாசைதினத்தன்று காலை ஆலயமுன்றலில் பயித்தம்கம்பு (கோலாட்டம்) அடிக்கப்பட்டது. அநேக மக்கள் ஆலயத்தில் சிவராத்திரி படிப் புகளைக் கேட்டுப் பயனடைந்தனர். அம்மாளுக்கு விசேட பூசையும் ஆராதனையும் நடைபெற்றது.

### திருக்கோணமலையில்

இம்முறை சிவராத்திரிவிழா திருமலையில் உள்ள பல ஆலயங்களிலும் சமயஸ்தாபனங்களிலும் சிறப்பாக நடைபெற்றது. விஸ்வநாத கோயிலில் சிவராத்திரி விழா அன்று சொற்பொழிவுகள், நாடகங்கள், இன்னிசைக் கச்சேரிகள் நடைபெற்றன. கோணேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி விரதத்தை ஏராளமான சிவபக்தர்கள் அனுஷ்டித்தனர்.

## செய்தித்திரட்டு

### யானைக்கூட்டம்

ஹிரியெல, திங்கள்

சுமார் 15 காட்டுயானைகளைக் கொண்ட கூட்டமொன்று, டுகான்கொன்வெல, அம்பகஸ்வெல ஆகிய இடங்களில் உலவி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரே இரவில் இந்தக் காட்டு யானைக்கூட்டம் 15 ஏக்கர் வயல்களை நாசமாக்கியதாம்!

### புயல்

கொழும்பு, திங்கள்

கொழும்புத் துறைமுகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை 40 மைல் வேகத்தில் புயல் வீசியது. திடீரென ஏற்பட்ட புயலினால் துறைமுகத்திலிருந்த சிறுவள்ளங்களுக்கும் கப்பல்களுக்கும் அபாயநிலை ஏற்பட்டது. சிறு வள்ளங்கள் ஒன்றோடு ஒன்று மோதி பெரும் சேதம் ஏற்பட்டது. துறைமுகத்திலுள்ள கப்பல்களுக்கு 'எச்சரிக்கை' கொடுக்கப்பட்டுள்ளது.

### பரிதாபமரணம்

கொழும்பு, திங்கள்

வெல்லம்பிட்டி, விஜயா வீதியைச் சேர்ந்த எட்டுவயது சிறுமி லலிதா ரஞ்சினி, எரிகாயங்களுடன் நேற்று மரணமானார். மதிய உணவைச் சாப்பிடுவதற்காக அடுக்களைக்குள் சென்றசமயம், அவரது சட்டையில் தீ பிடித்துக் கொண்டது.

### விபத்து

வெலிகாமம், திங்கள்

களனியிலிருந்து யாத்திரிகர்களுடன் கதிர்காமத்துக்குப் புறப்பட்டுச் சென்ற ஒரு கார், மகவீதிய என்ற இடத்தில் லொறி ஒன்றுடன் மோதியது. சிலருக்குச் சிறுகாயம் ஏற்பட்டது. ஆனால் வாகனங்கள் சேதமடைந்தன.

### நியமனப்பத்திரம்

கோப்பாய், ஞாயிறு

அச்சுவேலி கிராமசபையின் 14 வட்டாரங்களுக்கான அபேட்சகர்களின் தெரிவு நடைபெறவிருக்கிறது. இதற்கான நியமனப்பத்திரங்கள் மார்ச் 8-ந்தி திகதி காலை [illegible] மணி தொடக்கம் 11 மணி வரை அச்சுவேலி கிராமசபையில் வைத்து ஏற்றுக் கொள்ளப்படும்.

### அறுவடை

திருமலை, திங்கள்

தம்பலகமம், குடியேற்றப் பகுதிகள், கண்டக்காடு, தீனேரி, நிநாவல், மோட்டை பாலம், பாலமபோட்டாறு, கந்தளாய், போட்டங்காடு, பன்குளம், ஆண்டாங்குளம், பன்மதவாச்சி முதலிய இடங்களில் செய்த மாரிவேளாண்மை அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

### சைக்கிள் இருந்தும்...

திருமலை, திங்கள்

திருமலை சிவில் ஆஸ்பத்திரியில் மருந்துபெறச் சைக்கிளில் செல்லுபவர்கள் மருந்து பெற்றுவிட்டு சைக்கிளை உருட்டிக் கொண்டு வீடு திரும்ப வேண்டியநிலை சென்ற சில தினங்களாகத் தொடர்ந்து இருந்து வருகின்றது. காரணம் வெளியில் சைக்கிளை வைத்துவிட்டு ஆஸ்பத்திரியினுள் சைக்கிள் சொந்தக்காரர்கள் சென்றவுடன் அங்கு கடமைபார்க்கும் கங்காணிமார்கள் காற்றைத் திறந்து விடுகின்றனராம்.

### புதியபாதை

திருமலை, திங்கள்

உப்புவெளி கிராமச்சபையின் வேண்டுகோளுக்கிணங்க திருக்கோணமலை பட்டினப் பிரிவுக் காரியாதிகாரியும் கிராமச்சபைத் தலைவரும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு ஆண்டாங்குளம், பாலையூற்று பாதையை உடனடியாகத் திருத்தம் செய்ய வேண்டுமென்றும் அதற்குரிய சகல ஒழுங்குகளையும் அரசாங்க அதிபர்மூலம் செய்வதெனவும் உறுதி கூறப்பட்டது.

### நல்லூரில்

நல்லூர் தேவஸ்தான காவலரின் ஆதரவுடன் அகில இலங்கைப் பொதுஜன சேவைச்சங்க சமயப் பிரசார சபையினரால் சிவராத்திரி உற்சவவிழா சண்முகதீர்த்த மண்டபத்திலும் தேவஸ்தான மண்டபத்திலும் நடைபெற்றது. சபைன் உபதலைவர் திரு. பொன் அப்புக்குட்டியின் ஆரம்ப உரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. சங்கச்செயலாளர் த. இராசரத்தினம் உட்படப்பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

## ஜாதி ஒழிப்பு போராட்டம்
### 'உரிமை குறைந்த தமிழர் இயக்கம்' நடத்தும்

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை உரிமை குறைந்த தமிழர் அபிவிருத்தி இயக்கம் ஜாதி வேறுபாட்டை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது. சித்திரை மாதம் முதல் வாரம் போராட்டம் நடைபெறலாமெனத் தெரிகிறது. ஆலயப் பிரவேசத்திலும், தேனீர்க் கடைகளிலும் சத்தியாக்கிரகம் கையாளப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

இது விஷயமாக அகில இலங்கை உரிமை குறைந்த தமிழர் அபிவிருத்தி இயக்கம் விடுத்துள்ள வேண்டுகோளில் பின்வருமாறு தெரிவித்துள்ளது:

"ஜாதி வித்தியாசம் இலங்கைத் தமிழர் மத்தியில் சிறப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்றும் தலைவிரித்தாடுகிறது. இதனையிட்டு வருந்தாத பண்புள்ளம் படைத்த தமிழர்கள் இல்லை.

அமெரிக்காவில் நிறத்துவேஷம் எப்படி காலத்திற்குக் காலம் பல்வேறு உருவங்களை எடுத்ததோ அதே போன்று நம் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் இச் சாதி வித்தியாசம் பல்வேறு உருவங்களை எடுத்துச் சமுதாயத்தைப் பலவீனப்படுத்திவருகின்றது. ஆகவே இப் பிரச்னைக்குத் தீர்வுகாண உடனடியாக அறப்போர் புரிய எமது இயக்கம் முன்வந்துள்ளது.

இந்த அறப்போரில் கலந்து கொள்ளுமாறு பல ஸ்தாபனங்களையும் பெரியவர்களையும்கேட்டுள்ளோம்.

போசனசாலைகளும்,பொதுக் கிணறுகளும், பொது இடங்களும், பொது ஸ்தாபனங்களுமே சாதி வித்தியாசத்திற்கு நிலைக்களனாக அமைந்திருக்கின்றன. இவைகளுள் எமது இயக்கம் முதற்படியில் தேனீர்க் கடைப் பிரவேசம், சைவாலய பிரவேசம் இரண்டினையுமே செய்ய முற்பட்டுள்ளது.

தொண்டர்களும் ஆதரவாளர்களும் சேர்ந்து கடைகளைச் சாதிப்பாகுபாடின்றித் திறந்துவிடக் கோருவதெனவும், ஆட்சேபனை தெரிவிக்கப்படும்பட்சத்தில் அக்கடைகளுக்கு முன்னிலையில் சத்தியாக்கிரகம் நடத்தவும் ஏற்பாடாகியுள்ளது.


# ஒஸ்டர்மில்க்

## தாய்பாலின் தன்மையை மிக நெருங்கியது




தாய்பால் ஊட்டமுடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற் போகும் வேளைகளிலோ நீ[illegible] ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்ப முடியும். ஒஸ்டர்மில்க் திடகாத்திரமான சுகவளர்ச்சிக்கு அவசியமான இரும்பு சத்தும், விட்டமின் டி யும் கொண்ட ஒரு சுத்தமான பால் ஆகாரம்.

**உங்கள் குழந்தை ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் திகழ**

# ஒஸ்டர்மில்க்

ஒஸ்டர்மில்க் குழந்தை புத்தகம் இலவசமாய் கொடுக்கப்படும்.
தபாற் செலவுக்காக 10 சத முத்திரை ஒன்றை கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.
கிளக்ஸோ—அலன்பரிஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு.

# சீன-சோவியத் மகாநாடு: மங்கோலியாவில்நடைபெறும்?

மாஸ்கோ, பெப். 25

கம்யூனிஸ்ட் சீனத் தலைவர் மாஸேதுங் சீனாவிலுள்ள சோவியத் ஸ்தானிகரைச் சென்ற சனிக்கிழமை சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பு நேசபாவத்துடன் நடைபெற்றதாக நவ சீன செய்திஸ்தாபனம் தெரிவித்தது.

சோவியத்தூதர் - மா-ஸேதுங் சந்தித்துப்புபற்றிய செய்தியை சோவியத் பத்திரிகையான 'பிராவ்டா' முன்பக்கத்தில் பெரிய எழுத்தில் பிரசுரித்திருந்தது.

**மகாநாடு நடைபெறும்**

சோவியத் யூனியனுக்கும் நவ சீனாவுக்குமிடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமைகளை நீக்குவதற்கு இரு நாடுகளுக்குமிடையில் மகாநாடு ஒன்று நடைபெறுவதற்கு இரு நாடுகளும் ஒப்புக்கொண்டிருப்பதாக லண்டன் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

சீன-சோவியத் மகாநாடு மங்கோலிய நகரம் ஒன்றில் விரைவில் நடைபெறுமெனத் தெரிகிறதாக அப்பத்திரிகை கூறியது.

## இந்தியாவில் 12 ரடார் நிலையங்கள்

புதுடில்லி, பெப். 24

இந்தியாவந்திருந்த அமெரிக்க, சாம்ராஜ்ய விமான தூதுகோஷ்டி 12 முன்னெச்சரிக்கை ரடார் நிலையங்களை நிறுவவேண்டும் என யோசனை கூறியிருக்கிறது. எதிரிகளின் விமானம் நகரங்களை அணுகும் முன்பே இந்திய விமானங்கள் பறந்துசென்று அவற்றை இடைமறித்துத் தாக்க இது வசதியாய் இருக்கும் என்று தூதுகோஷ்டி கருதியது. அஸ்ஸிாமில் சூபர் ஷோனிக் விமனங்கள் இறங்கி ஏற வசதியாக விமானத்தளங்களை விஸ்தரிக்கவும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

# சீனாவின் ஆக்கிரமிப்பு இந்தியாவுக்கு ஒரு போதனை

## நிதிமந்திரி தேசாய் கருத்து

லக்ஷ்மணபுரி, பெப். 25

"பஞ்சசீல நெறி முறைகளை உதறித்தள்ளிவிட்டு வஞ்சகமாக இந்தியாமீது சீனா ஆக்கிரமிப்புச் செய்தது. எப்போதும் நாம் வலுவுள்ளவர்களாக இருக்கவேண்டியதன் அவசியத்தை எங்களுக்குப் போதிக்கிறது" என்று இந்திய நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் நேற்று இங்கு ஒருவைபவத்தில் பேசுகையில் கூறினார்.

நாட்டின் பாதுகாபபுக்கும் வலிமைக்கும் விவசாயத்துறையிலும் கைத்தொழில் துறையிலும் உற்பத்தி அதிகரிக்கப்படவேண்டுமென்று திரு. தேசாய் கூறினா.

நடுநிலைமைக் கொள்கைதான் சரியானதென்றும் இக்கொள்கை இந்தியாவுக்கு வெற்றியளித்துள்ளதென்றும் திரு. தேசாய் கூறினார்.

தங்கக் கட்டுப்பாட்டு விதிகளைத் தளர்த்தும் எண்ணம் கிடையாது என்றும் கள்ளக் கடத்தலைத் தடுக்கமேலும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் நிதிமந்திரி தெரிவித்தார்.

தங்கக் கட்டுப்பாட்டு விதிகளினால் வேலை இழக்கும் நகைத் தொழிலாளர்களுக்கு வேறு வேலை வாய்ப்பளிப்பதற்கு அரசாங்கம் உதவிசெய்யுமென்று திரு. மொரார்ஜி தேசாய் கூறினார்.

ஒரு பயனுமில்லாமல் தங்கத்தில் முடங்கிக்கிடக்கும் பணம் நாட்டின் அபிவிருத்திக்கு உதவுவதற்காகவே தங்கக்கட்டுப்பாட்டு விதிகள்கொண்டு வரப்பட்டனவென்று அவர் கூறினார்.

# ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி காரியதரிசி கைது

பாக்தாத், பெப். 25

ஈராக்கில் ஜெனரல் காசிமின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு கேணல் ஆரிபின் தலைமையில் புதிய புரட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் நகரிலிருந்து விலகிச்சென்ற டாங்கிகளும் கவச மோட்டார்களும் நேற்று மீண்டும் பாக்தாத் நகரில் காணப்பட்டன. இதற்கான காரணங்கள் தெரியவில்லை.

ஈராக் பாதுகாப்பு பொலிசார் ஈராக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசியையும் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தர் இருவரையும் நேற்றுக் கைதுசெய்தனர்.

இவர்களைக் கைது செய்யும் பொழுது ஏற்பட்ட துப்பாக்கிச்சண்டையில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொரு பெண்ணும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஜெர்மன் மந்திரி வாஷிங்டன் செல்கிறார்

பொன், பெப். 25

மேற்கு ஜெர்மன் பாதுகாப்பு மந்திரி இன்று வாஷிங்டனுக்குப் புறப்பட்டுச் செல்கிறார். மேற்கு ஜெர்மனுக்கு அணு ஆயுதங்கள் பெறுவது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்த அவர் சென்றுள்ளதாகத் தெரிகிறது.

## ரஷ்யாவில் இனவேற்றுமை இல்லை

மாஸ்கோ, பெப், 25

சோவியத் யூனியனில் இனப் பாகுபாடு இருப்பதாகக் கூறுவது முழுப் பொய் என்று மாஸ்கோவிலுள்ள லுமும்பா பல்கலைக் கழகத்தில் படிக்கும் ஆபிரிக்க மாணவர்கள் தெரிவித்தனர். மேற்கத்திய பத்திரிகைகள் சிலவற்றில் வெளிவந்த செய்திகளுக்கு மறுப்புத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

## யேமனில் மீண்டும் சண்டை

சனா, பெப். 25

யேமனில் புரட்சி அரசாங்கத் துருப்புக்களுக்கும் இமாமின் ஆதரவுத் துருப்புக்களுக்குமிடையே மீண்டும் சண்டை நடைபெறுவதாகவும் இமாமின் ஆதரவுத் துருப்புக்கள் சனா நகருக்குள் முன்னேறிச் சென்றுகொண்டிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

## ஈராக்கில் யேமன் தூதுக்குழு

பாக்தாத், பெப். 2௫

யேமன் நல்லெண்ணத் தூதுகோஷ்டியொன்று ஈராக்கிற்கு விஜயம்செய்துள்ளது

ஐக்கிய அரபுக் குடியரசின் குடியரசுதின விழாவில் கலந்துகொள்வதற்காக யேமன் தூதுகோஷ்டியொன்று கெய்ரோ சென்றுள்ளது.

## அணு ஆயுத பரீட்சை

### பிரஞ்சு மந்திரி மறுப்பு

பாரிஸ், பெப். 25

ஸ்பெயினுக்குச் சொந்தமான சகாரா பாலைவனப் பகுதியில் பிரான்ஸ் அணுஆயுத சோதனை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக வெளிவந்த செய்தியை பிரஞ்சு ராணுவ மந்திரி மறுத்தார்.

அல்ஜீரியாவுக்குச் சொந்தமான சகாராபாலைவனப் பகுதியில் பிரான்ஸ் அணு ஆயுத சோதனை நடத்தினால் பிரான்சுடனுள்ள ராஜீய உறவை அல்ஜீரியா முறித்துக்கொள்ளும் என்று அல்ஜீரியா பயமுறுத்தியதால் ஸ்பெயினுக்குச் சொந்தமான பகுதியில் அணு ஆயுத சோதனை நடத்தத் திட்டமிடுவதாக ஒரு செய்தி வெளி வந்தது.

பசிபிக்கில் ஒரு தீவில் அணு ஆயுத சோதனை நடத்துவதற்கு இப்பொழுது பிரான்ஸ் முயற்சி செய்துவருவதாக அறியப்படுகிறது.

## சர்ச்சிலை டீபன் சந்தித்தார்

லண்டன், பெப். 25

கனடாப் பிரதமர் திரு. டீபன்பேக்கர் பிரிட்டிஷ் மாஜிப் பிரதமர் சர் வின்ஸ்டன் சேர்ச்சிலை நேற்று சந்தித்துப் பேசினார்.

## கத்தரிக்கோலுக்கு ரூ. 1100!

சென்னை, பெப். 24

சென்னை முதன் மந்திரி திரு. காமராஜ், பாதுகாப்பு நிதிக்கு அளிக்கப்பட்ட வெள்ளிக் கத்தரிக்கோல் ஒன்றை ஏலமிட்டதில் ரூ. 1100 கிடைத்தது.

---

சிங்கப்பூர், பெப். 25

மலேசியாக் கூட்டரசு அமைக்கப்பட்ட பின்னரும் இந்தோனேஷியாவுடன் மலாயா, சிங்கப்பூர் தொடர்ந்து நல்லுறவு வைத்திருக்கும் என்று சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்லீ தெரிவித்தார்.

# உலகப்பிரச்னைகளுக்கு நிரந்தரத்தீர்வு காணவழி

## புத்தரின் போதனைதான் என்கிறார் பிரதமர் நேரு

புதுடில்லி, பெப். 26

"புத்தரின் போதனைகளைப் பின்பற்றுவதன் மூலமே உலகப் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண முடியும்" என்று இந்தியப் பிரதமர் நேற்று புதுடில்லிக்கு அருகில் உள்ள புதிய புத்த விகாரைத் திறப்பு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

புத்தபிரான் போதித்த அன்பு, கருணை, விவேகம் ஆகியவைகள் இன்றைய உலகுக்குத் தேவை என்று நேரு கூறினார். "வெறுப்பும் போர் அச்சமும் கொண்டுள்ள இன்றைய உலகம் அன்பு, கருணை, விவேகம் ஆகிய புத்தபிரானின் போதனைகளைக் கடைப்பிடித்தால்தான் சகல பிரச்னைகளுக்கும் நிரந்தரமான தீர்வு கண்டு கடைத்தேற வழி பிறக்கும்" என்று பிரதமர் நேரு சொன்னார்.

திபெத்திலிருந்து நாற்பதாயிரம் திபெத்திய பௌத்தர்கள் இந்தியாவுக்கு வந்துள்ளார்களென்றும் இவர்கள் உலக மாறுதலுக்கேற்ப தங்கள் கலாசாரத்தையும் மரபையும் இழந்துவிடாமல் வாழ வேண்டுமென்றும் லடாக்கிலும் நேபாளிலிருந்தும் பௌத்தர்கள் வந்துள்ளனரென்றும் அவர்களின் வளர்ச்சியையும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் பிரதமர் நேரு கூறினார்.

புத்தகயாவிலிருந்துகொண்டு வரப்பட்ட போதிமரபதியமொன்றையும் பிரதமர் நாட்டி வைத்தார்.

இவ்வைபவத்தில் கலாசார மந்திரி பேராசிரியர் ஹுமாயின் கமீர் பேசுகையில் இந்தியா ஒரு ஆராய்ச்சிக் கூடமென்றும் சகல மதங்களும் இங்கு செழிப்புடன் வளர்ச்சி பெறுகின்றனவென்றும் கூறினார்.

## 262 சடலங்கள் மீட்பு

### கொள்ளைக்காரரை சுட உத்தரவு

பென்காசி, பெப். 25

லிபியாவில் பொன்காசிக்குச் சிறிது தூரத்தில் சமீபத்தில் ஏற்பட்ட பூகம்பத்தினால் மாண்டுபோனவர்களின் சடலங்களை இடிபாடுகளுக்கிடையிலிருந்து மீட்பதில் ஈடுபட்டிருந்த பிரிட்டிஷ் துருப்பினர் தங்கள் வேலையை முடித்துக்கொண்டனர். 262 சடலங்களை அவர்கள் மீட்டனர்.

பூமியதிர்ச்சி ஏற்பட்டதும் எத்தனைபேர் பக்கத்துக் கிராமங்களுக்கு ஓடிச்சென்று தஞ்சமடைந்தனரென்பது தெரியவில்லை யென்றும் பலரைப் பற்றிய தகவல் இன்னும் இல்லையென்றும் அரசாங்க அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. கொள்ளைக்காரரைக் கண்ட இடத்திலேயே சுடும்படியும் துருப்புக்களுக்கும் பொலிசாருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒருவருடத்தில்

# பொலிஸாருக்கு எதிராக 1119 புகார்கள்!

கொழும்பு, திங்கள்

1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ந் திகதிக்கும் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் திகதிக்குமிடைய பொலிஸாருக்கு எதிராகப் பொதுமக்கள் 1119 முறையீடுகள் செய்துள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

இதே காலத்தில் பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கியதாக 116 வழக்குகள் பதிவாகியுள்ளன.

பொலிஸாருக்கு எதிராகப் பொதுமக்கள் செய்த முறையீட்டுகளில் 13 முறையீடுகள் சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. இதுதவிர பொதுமக்களின் 983 முறையீடுகள் பொலிஸ்பகுதியால் விசாரணை செய்யப்பட்டு தகுந்த சாட்சியங்களில்லாத காரணத்தினால் இவற்றில் 938 முறையீடுகள் தொடர்ந்து விசாரணை செய்யப்படவில்லை. மொத்தமாகவுள்ள முறையீடுகளில் 45 மட்டுமே வழக்குத் தொடருவதற்கு ருஜுப்படுத்தப்பட்டன. 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம்வரை 123 முறையீடுகள் முற்றாக விசாரணை செய்யப்படாமலிருக்கின்றன.

பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கியதாக 116 வழக்குகள் பதிவாகியுள்ளன. இச்சம்பவங்களில் சிலாபம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பண்டா என்பவர் மரணமானார். 66 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் படுகாயமடைந்தனர்.

**அரசாங்க உத்தியோகஸ்தர்**

கடந்த இரண்டு வருட காலத்தில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட புகார்கள் சிறிது அதிகரித்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. இதுசம்பந்தமாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எம். டபிள்யு. எவ். அபயக்கூன் வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்து 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்த ஒருவருட காலத்தில் 13 முறையீடுகள் பொலிஸில் பதிவாகியுள்ளதாகத் தெரியவருகிறது. இது சம்பந்தமாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிகளில், ரூபா 240,000 கொண்டதபால்பை திருட்டும் ஒன்றாகும். இந்த வழக்டல் இரண்டு புகையிரத காட்டுகளும், புகையிரத சாரதியும் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## தாயகம் திரும்பும் எழுத்தாளர்

கொழும்பு, திங்கள்

இலங்கைப் பத்திரிகைத் துறையில் இருபத்தைந்து ஆண்டுகள் பணி புரிந்து சமீபத்தில் தாயகம் திரும்பவிருக்கும் (வீரகேசரி வாரப் பதிப்பு) ஆசிரியர் திரு. லோகநாதனுக்கு ஒரு பிரிவுபசாரம் அளித்து அவரைக் கௌரவிக்க இலக்கிய அன்பர்கள் பலர் முயற்சி எடுத்துவருகிறார்கள். இதற்காக இலங்கையில் உள்ள சகல தமிழ், சிங்கள, ஆங்கில தினசரிப் பத்திரிகைகளிலும் பிரதான தமிழ் வாராந்தப் பத்திரிகைகளிலும் மற்றும் இந்திய, அமெரிக்க, பிரிட்டிஷ், ரஷ்ய தூதராலயங்களிலும் கடமையாற்றும் ஒவ்வொரு இலக்கிய அபிமானியைக்கொண்டதொரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

பிரியாவிடை விருந்துபசாரத்தை மார்ச் முதல் வாரத்தில் கிராண்ட் ஓரியன்டல் ஹோட்டலில் நடத்தவும் அத்தருணம் கொழும்பு மேயரைக்கொண்டு திரு. லோகநாதனுக்கு அன்பளிப்புகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## 'வகுப்புவேற்றுமை சட்டவிரோதம்'

### குருஷ்சேவ் விளக்கம்

லண்டன், பெப். 25

'வகுப்பு வேற்றுமை காட்டுவது ரஷ்யாவில் சட்டவிரோதமாக்கப்பட்டுள்ளது' என ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ் பிரிட்டிஷ் தத்துவஞானி பேர்ட்ரன்ட் ரஸ்ஸல் பிரபுவுக்கு அனுப்பியுள்ள பதிலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேர்ட்ரன்ட்ரஸ்ஸல்ரஷ்யாவில் பொருளாதாரகுற்றச்சாட்டுகளுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள யூதர்களுக்கு விடுதலை வழங்கப்படவேண்டுமென திரு. குருஷ்சேவுக்கு அனுப்பியிருந்த தொடர்ச்சியான கடிதங்களுக்குப் பதிலளிக்கையிலேயே திரு. குருஷ்சேவ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

## காங்கோவுக்கு அதிக உதவி

வாஷிங்டன், பெப். 25

காங்கோவுக்கு அமெரிக்கா மேலும் அதிக உதவி அளிக்கவிருக்கிறது. புதிய ஒப்பந்தம் ஒன்று இதுசம்பந்தமாகக் கைச்சாத்திடப்பட்டது.

### மணி வாக்கு

உடலை மட்டுமன்றி உள்ளத்தையும் சிந்தனையையும்கூட நோன்பு பரிசுத்தப்படுத்த வேண்டும். கஷ்டப்படுபவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற ஓர் ஆர்வத்தை மனதில் உண்டுபண்ணுமானால் அதுதான் ரம்ஸான் நோன்பின் வெற்றியாகும்.

— ஜனுப் அக்பர் கலீலி


# ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49. Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389


யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மாசி மீ 14உ (26-2-63)

## இலங்கைப் பொலிஸ்

இலங்கைப் பொலிஸ் படையிலுள்ள மொத்தம் 9688 பேர்களில், 100-க்கு 79 பேர் சிங்களவராம். தமிழர் 13, மலாய்க்காரர் 4, சோனகர் 2, பறங்கியர் 1.7, மற்றவர்கள். 3 என்று சென்ற வாரத்தில் வெளியான பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் 1960—61-ம் வருட நிர்வாக அறிக்கை தெரிவிக்கின்றது.

பொலிஸ் படையிலுள்ளவர்களை இப்படி இனவாரியாகப் பிரித்துக் கணக்குக் காட்ட வேண்டிய நோக்கம் என்ன வென்று தெரியவில்லை. காரணம் எதுவாயினும் பொது மக்கள் அனைவருக்கும் எவ்வித வேற்றுமையின்றித் தொண்டு செய்ய வேண்டிய பொலிஸார், தாங்கள் ஒரு குறிப்பிட்ட இனத்தையோ, மதத்தையோ, அல்லது சாதியையோ சேர்ந்தவரென்ற உணர்ச்சி கொண்டிருப்பின், அவர்கள் தங்கள் கடமையைப் பாரபட்சமின்றி செய்வதற்குத் தடையாக இருக்கக்கூடும். சிறப்பாகச் சிறுபான்மை சமூகத்தையோ மதத்தையோ, அன்றி சாதியையோ சேர்ந்த பொதுமக்களுக்குப் பொலிஸ் படையின்மீதுள்ள நம்பிக்கை இவ்வித புள்ளி விவரங்களால் பலப்பட முடியாமலும் போகலாம்.

அது ஒருபுறமிருக்க, ஜனத்தொகை விகிதாச்சாரப்படியே பார்த்தாலும் தமிழ்ப்பேசும் மக்களுக்கு, இப்படையில் போதிய இடமளிக்கப்படவில்லை என்பது அம்பலமாகிறது. இலங்கையின் மொத்த ஜனத்தொகையில் சுமார் மூன்றில் ஒருபங்கினர் தமிழ்ப்பேசும் மக்கள். அதன்படி 100க்கு 33 பேர்வீதம் பொலிஸ் படைக்கு நியமிக்க வேண்டி இருக்க, 19 பேர்களே இருப்பதாக இந்த அறிக்கை தெரிவிக்கின்றது. சிறுபான்மை மக்களுக்கு விசேஷ சலுகை காட்ட வேண்டி இருக்க ஏன் அவர்களது ஜனத்தொகை விகிதாச்சாரத்துக்கும் மிகக் குறைவானவர்களே இப்படைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்?

மேலும் அவர்களை மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளதுடன் இஸ்லாமியரையும் மலாயர் என்றும் சோனகர் என்றும் ஏன் தனித்தனிப் பிரித்துக் காட்ட வேண்டும்? சிங்களவரைப் பிரிக்காமல் ஒரே இனமாகக் காட்டி இருப்பது போல் தமிழ்ப்பேசும் மக்களையும் ஏன் ஒரே பிரிவாகக் காட்டக் கூடாது? இது எப்படியாயினும்சரி, நாட்டிலே தேசிய ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்று பிரதமரும் வற்புறுத்திவரும் இச்சமயத்தில் பொலிஸ் போன்ற மிக முக்கியமான சேவையில் ஈடுபட்டவர்களை இனவாரியாகப் பிரிப்பது, விரும்பத்தக்க தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்த சிறிதும் உதவ முடியாது.

திறமை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, இப்படைக்கு ஆட்களைத் தெரிவு செய்ய வேண்டும். இன்றேல் பொலிஸ் படையினர் தரமும் அவர்களின் சேவையும் மிக மோசமாகிவிடக்கூடும். இன்று நாட்டிலே பொலிஸ்மீதுபொது மக்களுக்குப் போதிய நம்பிக்கை இல்லை. பார்லிமெண்ட் சபையில் பொலிஸைப்பற்றிப் பலபல புகார்கள் கூறப்படுகின்றன. பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் மேலான நல்லுறவு இல்லாத காரணத்தால், குற்றங்கள் அதிகரிக்கவும், பலகுற்றங்கள் கண்டு பிடிக்கப்பட முடியாமலும் போவதில் வியப்பில்லை.

பொலஸாரில் 100-க்கு 75 பேருக்கு அரசாங்க மொழியில் போதிய அறிவு இருப்பதாயும் கீழ்த்தரப் பதவி வகிப்பவர்களுக்கே வெகுவாக சிங்கள மொழியில் திறமை இருப்பதாகவும் அறிக்கை தெரிவிக்கிறது. இலங்கையிலே சிறப்பாக மூன்று மொழிகள்பேசும் மக்கள் பலஇடங்களிலும் கலந்து வாழ்கின்றனர்கள். அப்பொதுமக்களுக்கு மிக முக்கியமான பாதுகாப்பு சேவை செய்யும் பொலிஸாருக்கு மூன்று மொழிகளும் ஓரளவாவது தெரிந்திருக்க வேண்டியது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை. அப்படிஇன்றி, எக்காரணத்தாலோ தமிழோ, ஆங்கிலமோ தெரியாத பொலிஸாரை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நியமிப்பதால் மக்களுக்கு எவ்வளவோ சங்கடங்கள் ஏற்படுவதைப் பார்க்கின்றோம். பொதுமக்களின் மூன்று மொழிகளும் பொலிஸாருக்கு ஓரளவாவது தெரிந்திருந்தால்தான், பொலிஸாரும் தங்கள் பொதுஜனக் கடமையைத் திறமையாகச் செய்யவும், மக்களின் நம்பிக்கையையும் பெறவும் முடியும்.

பொலிஸ் படையை அடியோடு திருத்தி அமைக்க போவதாக முன்னாள் நிதிமந்திரி முன்னர் பார்லிமெண்ட் சபையில் அறிவித்திருந்தார். இனம், மதம் முதலியவற்றைக் கவனிக்காமல் திறமை,நேர்மை இவற்றையே முக்கியமாகக் கருதி இப்படையை அமைத்தாலே தேசிய சமூக ஒற்றுமை பலப்படுவதுடன், நாட்டில் மக்கள் நிம்மதியாக வாழ பொலிஸ் படையும் உதவியாக இருக்க முடியும். பொலிஸாருக்காகப் பொதுமக்களின் பணம் வருடத்தில் சுமார் ரூபா 5 கோடி செலவழிக்கப்படுகிறது. நாட்டின் அமைதியையும் ஒற்றுமையையும் முன்னேற்றத்தையும் பலப்படுத்தும் முறையில் இப்பணத்தைச் செலவழித்து, திறமையான மேலான பொலிஸ் படையை அமைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப் பொதுமக்களுக்கு உரிமையுண்டு. இன்றுள்ள நிலைமை இதற்கு நேர்மாறாக இருப்பது பலவிதங்களிலும் வருந்தத்தக்கதாகும்.

# இஸ்லாம் மதம் கூறும் 'பஞ்சசீலம்'

(எம். எஸ். தமீம்)

மரணத்தை மறந்து மனிதன் என்ன வெல்லாமோ புரிய முற்படுகிறான். இம்மண்ணுலகில் நிரந்தரமாக வாழ்ந்திருப்போம் என்று கருதி அதில் மூழ்கி நிரந்தரமான மறுமையுலகு உண்டென்பதை மறந்து மதிமோசம் போய் விடுகிறான். உலக மாயையினால் அவ்வாறு நினைவிழந்து போனவனுக்கு மறுமையின் நல்வாழ்வுக்கான நற்பாதைகள் இஸ்லாத்தில் ஐந்து உண்டு. அவவைந்து வெவ்வேறான பல உரிய திட்டங்களை அடிப்படையாகக் கொண்டன. ஒவ்வொன்றும் தன்னிகரில்லாத் தூண்களாகும். அவ்வைந்து தூண்களுள் நான்காவதாக இருப்பது நோன்பு நோற்றலாகும். இதனை மூஸ்லிம்கள் கிரமமாக செய்துவரின் அன்னார் ஏழைகளின் பசியை அறிந்து அவர்களுக்கு (ஸக்காத்) ஏழைவரி கொடுக்க ஏதுவாயிருக்கும். அது மட்டுமல்ல, சமதர்மக் கொள்கையென்பது வெக்காத்தை கொடுத்தவரின் தோன்றியிருக்காது. இதனை நன்குணர வேண்டும். இத்தகைய இரு வணக்கங்கள் விசேஷமாக றம்ழான் மாதத்தில் எல்லாத் தேசங்களிலுமுள்ள பல முஸ்லிம்களால் செய்யப்பட்டு வருகின்றது.

இதனாலன்றோ எம்பிரான் றசூலேகரீம் (ஸல்) அவர்கள் "மாதங்களில் றம்ழானை விட மேலானதான தாய் வேறொன்றில்லை. எனவே உங்கள் வணக்கங்களை றம்ழானில் அதிகரியுங்கள். அந்நாளில் ஒருவன் செய்யும் பாவம் பத்து மடங்கு அதிகமாயும் நன்மை 10 மடங்கு அதிகமாயும் றகீப், அதீத் (அலைஹிமஸ்ஸலாம்) ஆகிய மலக்குகளால் எழுதப்படுகின்றது" எனக் கூறிப் போந்து, றம்ழான் மாதத்தின் மகிமையை அழுத்தமாகச் சுட்டிக் காட்டினார்கள்.

இஸ்லாத்தின் ஐந்து தூண்களாவன:- கலிமா கூறுதல், தொழுதல், ஸக்காத் கொடுத்தல், நோம்பு நோற்றல், ஹஜ்ஜீ செய்தல் ஆகியனவாகும். இவ்வைந்து மூலதானங்களையே ஒரு முஸ்லிம் முதலிட்டு நன்மையை உழைக்க வேண்டும். ஆரம்பத்திலேயே கலிமாவைவாயால் மொழிந்து உள்ளத்தால் திடப்படுத்திய ஒரு முஸ்லிம் அதன் பின்னர் தொழ ஆரம்பிக்கின்றான். இங்ஙனம் ஆரம்பித்த பின் அவனுடைய அடுத்த கடமைகளை றம்ழான் மாதத்தில் நிறைவேற்றுகின்றான். ஐந்தாவது காரியமான ஹஜ்ஜை றம்ழான் பெருநாளைக் கழித்து சற்றேறக்குறைய சில நாட்களில் அக்கடமையையும் ஆரம்பிக்கத் தொடங்கி விடுகிறான். எனவே இதிலிருந்து நபி (ஸல்) அவர்கள் கூறிய செய்தி நம்மைப் பொறுத்த மட்டில் உண்மையாகி விட்டது.

திருகுர் ஆனில் அநேக இடங்களில் நோம்பை நோற்குமாறு இறைவன் கட்டளையிட்டிருக்கிறான். "ஏ! மூஃமின்களே!! உங்களுக்குமுன்னிருந்தவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்ததைப் போன்று உங்கள் மீதும் நோம்பு விதிக்கப்பட்டிருக்கிறது" என்றும் தொழுகையை நியமமாகச் செய்யுங்கள், இன்னும் ஸக்காதது நோம்பு ஆகிய கடமையான வணக்கங்களையும் புரியுங்கள் என்றும் கூறியிருக்கின்றான்.

"நோன்பாளியின் பாவங்கள் அல்லாஹ்வினால் மன்னிக்கப்படும். அவருடைய நன்மைகள் இரட்டிக்கப்படும்" என அல்லாஹ் சுபுஹான ஹீவத்த ஆலா திருநபி (ஸல்) அவர்களுக்கு வாக்களித்திருக்கின்றான். இன்னும் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானர்கள். நோன்பாளியின் நித்திரை வணக்கமாகும், அவருடைய மூச்சு (தஸ்பீஹ்) துதித்தல் ஆகும்."

ஜிப்ரீல் (அலை) அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களிடம் "என் வேலை உங்களுடன் முடிந்து விட்டது. உங்கள் மறைவிற்குப் பின் நான் துனியாவு(உலகு)க்கு வரமாட்டேன்" எனக் கூறியபோது "ஓ! ஜிப்ரீலே!! லைலத்துல் கத்ரின் இரவில் நீர் அங்கு அனுப்பப்படுவீர்" எனும் அல்லாஹவின் அசரீரீ வானத்தில் நின்றும் கேட்கப்பட்டது. அந்த லைலத்துல் கத்தடைய இரவாகியது எம்பிரான் முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்கட்கு அல்லாஹ்வினால் ஜிப்ரீஸ் (அலை) அவர்கள் மூலமாக நம் வேதமாகிய குர் ஆனின் ஒரு அத்தியாயத்தை இறக்கிவைத்த நன்னாளாகும். அந்த இரவைப்பற்றி இன்னும் சரித்திராசிரியர்களிடம் பேத முள்ளது. எனினும் 'அது றம்ழான் பிறை பதினைந்துககும் இருபத்தேழுக்கும் இடையில் உள்ள' என அவர்கள் கூறுகின்றனர். நாம் நோன்புப் பிறை இருபத்தேழை லைலத்துல் கத்ருடைய இரவாகக் கொண்டிருக்கின்றோம் ஆயினும் பள்ளிவாசல்களில் பிறை பதினைந்தில் இருந்து இருபத்தேழுவரை (தவ்பா) பாவமன்னிப்பு உடைய நாளாகக் கொண்டு இறைவனிடம் தவ்பா செய்து கொள்ளுகின்றோம். அந்த இரவைப்பற்றி திருநபி (ஸல்) அவர்கள் திருவுளமாயிருப்பதாவது: "அப்பேர்ப்பட்ட இரவு வேறொன்றில்லை." மேற்கூறிய தவ்பா, மற்றும் பல நற்காரியங்களையும் இந்த றம்ழான் மாதத்தில் செய்கின்றோம். நோன்பு மாதத்தில் (அமரர்) மலக்குகள் கூட்டம் கூட்டமாக உலகிற்கு விஜயம் செய்வனர். அங்ஙனம் செய்து, நற்காரியங்கள் செய்பவனை ஆண்டவனிடம் இறைவன் இந்தநல்லடியானை எல்லாவற்றுலும் மேன்மையாக்கி வைத்தருள்வாயாக' என்றும் தீய காரியங்களையும் வீணை காரியங்களேயும் செய்து கொண்டிருக்கும் மனிதனை ஆண்டவன் முனியுமாறும் இறைவனிடம் இறைஞ்சுவார்கள். நோன்பும் பிறை முப்பதில் (நோன்புப்பெருநாளுக்கு முதல் நாளில்) அமரர் றம்ழான் மாதம் தம்மைவிட்டு விலகுவதை எண்ணி ஏங்கி கண்ணீர் சொரிவர்.

நோன்புப் பெருநாள், நோன்பு நோற்றவர்களுக்கு மட்டுமேயாகும். நோன்பு நோற்கக் கடமையில்லாதவரையும், நோன்பு நோற்றவரையும் தவிர வேறு எவரும் அந்தத் திருநாளைக் கொண்டாடமுடியாதென ஆணித்தரமாகக் கூறலாம்.

அந்தப் பெருநாளைத் தம்வசமாகக்கொண்டவர்கள் அந்தப் பெருநாளின் இரண்டு ரக் அத்துக்களை தனியாகவோ, இமாம் ஜமா அத்துடனே தொழல் வேண்டும். இத்தொழுகையைத் தொழுவது சுன்னத்தாகும். இந்தத் தொழுகைக்குரிய நிய்யத்து.

"உஸல்லீ சுன்னத்த ஈதில் பித்திரி ரக் அதைனி லில்லாஹித்த ஆலாமஃமூமன் அல்லாஹு அக்பர்" இதன் கருத்தாவது:-

(5ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலே ஒரு சைவக் குடும்பத்தினர் தங்கள் பெண் குழந்தையைப் பக்கத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்காக, அக்குழந்தையை வேறு மதத்துக்கு மாற்றவேண்டியதாயிற்றும்! பள்ளி நிர்வாகிகள், மதமாற்ற முயற்சி எதுவும் செய்யவில்லை என்றும், இப்போதுள்ள கல்வி அமைச்சின் கண்மூடி உத்தரவே இதற்குக் காரணமென்றும் அறிந்தேன்.

ஒரு குறிப்பிட்ட சமயத்தவர் நடத்தும் பள்ளியிலே, அந்தச் சமயத்தைச் சேர்ந்த மாணவர்களை மட்டுமே சேர்க்கலாமென்றும், மற்றச்சமயத்தவரைச் சேர்க்கப்படாதென்றும், கல்வி இலாகா போட்டுள்ள கண்மூடி உத்தரவின் விபரீத பலனே இது. இன்னும் பல குழந்தைகள் கல்லூரியில் சேருவதற்காக மதம்மாற நேரிட்டதாம்!

பல இடங்களில் பள்ளிக்கூடங்கள் போதிய அளவு இல்லை. இருக்கும் பள்ளிக்கூடத்திலும் மதம் காரணமாகச் சேரக்கூடாது என்று போடும் உத்தரவால் குழந்தைகளுக்கு எவ்வளவு இம்சை! பிரதம மந்திரியும் அவரது குழந்தைகளும் வேறு மதக்கல்லூரியில், மதம் மாறுமலேயே படிக்க முடிந்திருக்கையில், இதே வசதியை ஏன் மற்றக் குழந்தைகளுக்கும் அளிக்கப்படாது?

கல்வி அமைச்சின் இந்த உத்தரவு, மதத்தைப் பாதுகாப்பதற்குப் பதில், பல குழந்தைகளையும் வீண் இம்சைக்கு உள்ளாககுவதாகவும், பல குடும்பத்துக்குவேதனை அளிப்பதாகவும்உள்ளது. இவ்வித உத்தரவை எதிர்க்க பெற்றோர்கள் என்ன முயற்சிசெய்யப்போகிறார்கள்?

* * *

சிவராத்திரியன்று கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் ஐம்பது பேருக்கு மேல் வேதாரண்யக் குருக்கள்மூலம் 'தீட்சை' எடுத்ததாகவும், 7 வயது முதல் 60 வயதுள்ளவர்களும் அதில் இருந்ததாயும் ஓரன்பர் தெரிவிக்கிறார்.

நாவலர் பெருமான் அவதரித்த யாழ்ப்பாணத்திலே, பெரும்பாலான சைவக்குடும்பத்தினர் தீட்சை பெறவில்லை! சமயகுரவர்மார் நால்வரும் இதைப்பற்றிப்பதிகங்கள் பாடி அறிவுறுத்தியும், எவ்வளவு பராமுகம்! சைவர்களுக்கு உயிர்போன்ற இவ்விஷயத்தில் பராமுகமாக இருந்து, சைவத்தை அவர்களே அவமதிப்பின், சைவம் எப்படி வளர முடியும்? சைவத்தால் அவர்களுக்கு என்ன நன்மை ஏற்படமுடியும்?

* * *

பர்மாவில் வங்கிகளைத் திடீரென தேசஉடைமை ஆக்கிவிட்டதைப் பின்பற்றி, இங்கு இலங்கை அரசாங்கமும் அவ்விதமே செய்யுமோ என்று பல வியாபாரிகளிடையேயும் பெருங்கவலை ஏற்பட்டுள்ளது.

இறக்குமதி வர்த்தகத்தில் புதுபுதுக் கட்டுப்பாடுகளைப் புகுத்தியதால், அடியிலிருந்து நுனிவரையில் பலருக்கும் பணமடிக்க நல்ல 'சான்ஸ்' என்றும் ஒரு வர்த்தக அன்பர் கதை கதையாகச் சொன்னார்.

ரஷ்யாவிலே கைலஞ்சம் வாங்கியவரையும் பிறுமானுக்களையும் சுட்டுத்தள்ளுவதாக செய்தி கூறுகிறது. இவ்வித உத்தரவு இங்குவந்தால்கூட நல்லதென்றுகூறியதும், பெரிய திமிங்கிலங்கள் தப்பிவிடுமென்றும், சிறிய மீன்கள்தான் பிடிபடுமென்றும் கூறினார் நண்பர்! உண்மைதானே?

# "மறுமலர்ச்சி மரபோடு ஒட்டியிருக்க வேண்டும்"

## இளைஞர் கழகவிழாவில் திரு. அமிர்தலிங்கம் பேச்சு

மாவிட்டபுரம், திங்கள்

"மறுமலர்ச்சி என்பது மரபோடு ஒட்டியதாகவே இருக்க வேண்டும். மரபுதவறிய வளர்ச்சி இனத்தின் வாழ்வையே சிதைத்துவிடும். வாழ்வின் அடிப்படையாக சில அறங்கள் பண்பாட்டில்ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன" என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு அ. அமிர்தலிங்கம் சித்தங்கேணி இளஞர் முன்னேற்றக் கழக ஏழாவது ஆண்டு விழாவில் உரை நிகழ்த்தியபோது கூறினர்.

செல்வன் சோ. சாம்பசிவம் தலைமையில் சித்தங்கேணி பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்ற விழாவில் திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்துபேசுகையில் குறிப்பிட்டதாவது:

மறுமலர்ச்சி என்ற பெயரில் வேற்றுநாட்டுவேண்டாத இலக்கியங்களைப் பிரதிபலிக்கும் அறியாமை கூடாது. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல என்பது தமிழன் நெறி. ஆயினும் வாழ்க்கையின் அடிப்படையாகஅனபு, அறம், மானம், தெய்வ நம்பிக்கை என்பன அமைந்துள்ளன மறுமலர்ச்சி இலக்கியங்கள் இவற்றைப் பேணவேண்டும். முற்போக்கு இலக்கியம் என்ற போர்வையில் கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டும் சில இலக்கியங்களைப் படைத்துவருகின்றனர். பண்பற்ற இப் படைப்புகள் எம் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தமாட்டாது.

பண்டித வித்துவான் கா. பொ. இரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இலக்கியம் மக்கள் வாழ்வோடு ஒட்டியது. மக்களது வாழ்வைஎடுத்துக்காட்டி உயர்ந்த நிலைக்கு அவர்களை இட்டுச்செல்வது இலக்கியத்தின் உயர்ந்த பண்பு ஆகும். நமது பண்டைய இலங்கியங்கள் யாவும் மக்கள் வாழ்வோடு தொடர்புடையன என்பதனை நாம் உணரவேண்டும்.

அகப்பொருள் இலக்கியங்கள் மக்களது இல்வாழ்க்கை பற்றியும் புறப்பொருள் இலக்கியங்கள் அவர்களது அரசியல் சமுதாயப் பணிகளைப்பற்றியும் விபரித்து விளக்குகின்றன. தமிழ் மக்களின் தனிப்பெரும் செல்வமெனக் கருதப்படும் தொல்காப்பியம் முதல் அதன் வழிவந்த சங்க நூல்கள் அனைத்துமே தமிழர் பண்பாட்டைப் பறைசாற்றுகின்றன.

### அரசியலும் தமிழரும்

அரசியல் தமிழ்மக்களுக்குப் புதியதுஅல்ல. பலலாயிரம்ஆண்டுகளாகவே அவர்கள் அரசியல் பற்றிநன்கறிந்தவர்களாக வாழ்ந்துவந்தனர். அதுமட்டுமன்றி அரசியல் நெறிமுறைகளைப் பற்றி வெகுதெளிவாகவகுத்துக்காட்டியவர்களும் தமிழர்களே. வள்ளுவர் தாம் இயற்றிய திருக்குறளில் அரசியலுக்கு முக்கியத்துவம்அளித்துள்ளார் புறநானூறு தமிழினத்தின் அரசியல் பண்பை எடுத்துக்காட்டுகிறது. மேலை நாட்டினர் அரசியலைச் சகதி எனக் கருதியிருந்த நாளில் தமிழர்கள் அரசியலைப் புனிதமானகதையாக வளர்த்து வந்தனர்.

இன்றுள்ளசூழ்நிலையில் தமிழ் மக்கள் அரசியல்விழிப்புணர்ச்சி மிக்கவர்களாக உரிமை வேட்கையுள்ளவர்களாக விளங்க வேண்டும். தங்கள் இனத்தின், மொழியின் உரிமையைப் பாதுகாக்கும் வீரர்களாக அவர்கள் வாழவேண்டும். சிங்கள இனத்திற்கு இந் நாட்டில் எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை நமக்கும் உண்டு.

நாம் சிங்களமக்களை வெறுக்கவில்லை. சிங்கள இனத்தை அழிக்க விரும்பவில்லை. வாழவிடு என்றுதான் வேண்டுகிறோம். ஒரு இனத்தை அடக்கி ஒடுக்கி மற்றொரு இனம் வாழமுயல்வது ஜனநாயகமாகாது.

சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டுதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன என்பதனை பத்திரிகை மசோதா நினைவுபடுத்துகிறது.

திருவாளர்கள் ப. க. பாலசுப்பிரமணியம், இ. சர்வானந்தன், எம். கே. சுப்பிரமணியம் ஆகியோரும்பேசினர்.

# தொழிலும் விவசாயமும்

## தமிழ் மக்களுக்கு எம். பி. புத்திமதி

யாழ்ப்பாணம், செவ்வாய்

'தமிழ் மக்கள் சுயமரியாதையுடன் வாழவேண்டுமெனில் அவர்கள் அரசாங்க உத்தியோகங்களை நம்பியிருக்கக் கூடாது. அவர்கள் கைத்தொழிலிலும், விவசாயத்திலும் ஈடுபடவேண்டும்' என்று பருத்தித்துறை எம். பி திரு க. துரைரத்தினம் கொக்குவிலில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர். கொக்குவில்—கோண்டாவில் தமிழரசுக் கிளையினுல் நடத்தப்பட்ட இப் பொதுக்கூட்டத்தில் டாக்டர் இ. எம். வி. நாகநாதன் பேசுகையில் கவர்னர் ஜெனரல் யாழ்ப்பாணம் வருவதனுல் ஏற்படக்கூடிய நிலைமைகளை விவரித்ததுடன், தமிழ் பேசும் மக்கள் தயங்காது குடியேற்றத்திட்டங்களில் குடியேறவேண்டும் என்றும் கூறினர். வேறுபலரும் இக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்.

# ஹைகமிஷனர் பதவிக்கு மந்திரி?

கொழும்பு, திங்கள்

தற்பொழுது பிரிட்டனில் இலங்கை ஹைகமிஷனராக இருக்கும் திரு. ஆர். எஸ். எஸ். குணவர்த்தன ஐ. நா.வில் இலங்கையின் நிரந்தரக் காரியதரிசியாக நியமிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

திரு. குணவர்த்தன இவ்வித நியமனம்பெற்ருல் ஹைகமிஷனர் பதவிக்கு ஒரு மந்திரி நியமிக்கப்படலாம் என்றும் அநேகமாக செனட்டிலுள்ள மந்திரி ஒருவர் நியமிக்கபபடலாமென்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே அடுத்த மாதத்தில் இலங்கையிலிருந்து சென்ற பல வெளிநாட்டுத் தூதர்கள் திரும்பிவரலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களது சேவைக்கால எல்லை முடிவுறுவதாலேயே இவர்கள் இங்கு வருகிருர்கள்

ராஜீய சேவைகளில் பல மாற்றங்கள் இடம்பெற இருக்கின்றன என்றும் நம்பப்படுகிறது.

# சாரணர் பற்றி உபராஷ்டிரபதி

புதுடில்லி, பெப். 25

இந்திய சாரணர் இயக்கம் நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையை முன்னிட்டு திருத்தி அமைக்கப்படவேண்டும் என்று உபராஷ்டிரபதி டாக்டர் ஸாகீர் ஹுசைன் டில்லியில் சாரணர் வைபவமொன்றில் நேற்றுப் பேசுகையில் யோசனை கூறினர்.

# மாணவர்களுக்கும் வர்த்தக கல்விபயிற்சி வேண்டும்

## பிரதமருக்கு தமிழ் எம். பி.க்கள் தந்தி

யாழ்ப்பாணம், செவ்வாய்

'சிங்களத்தில் வர்த்தகக் கல்வி பயில்வதற்கு ஆசிரியர்களுக்கும் சாதாரண மாணவர்க்ளுக்கு இருக்கும் விண்ணப்ப நிபந்தனைகள் தமிழ் மாணவர்களுக்கு மறுக்கப்படுவது பாரபட்சமான நடவடிக்கையாகும்' என்று இலங்கை தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கும், கல்விஅமைச்சர் ஜனப் பதியூதீன் மாமூத்துக்கும் அனுப்பியுள்ள தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அத் தந்திச் செய்தியில் மேலும் சொல்லப்பட்டிருப்பதாவது:

22. 2. 63-ல் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியில் விசேட வர்த்தக ஆசிரியர் பயிற்சிக்கு ஆசிரியர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம் என்றிருப்பதனை நீக்குக. மாணவர்களும் விண்ணப்பிக்கக் கூடிய வழிவகைகளைச் செய்க. ஆசிரியர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம் என்றிருப்பதனுல் தமிழ் மாணவர்கள் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளார்கள். அதே சமயத்தில் 1957-ம் வருடத்திலிருந்து வர்த்தக ஆசிரிய பிரவேசப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கக் கூடியதாக இருக்கையில், தமிழ் மாணவர்களைப் புறக்கணிக்கும் காரணம் என்ன என்று எனக்கு புரியவில்லை. மேலும் கடந்த வருடங்களில் தமிழ்பகுதிகளில் வர்த்தக ஆசிரியர்களை நியமிக்காத காரணத்தால் பிரவேசப் பரீட்சைக்கு 5 ஆசிரியர்கள் மட்டுமே விண்ணப்பிக்கமுடியும் ஆகவே வர்த்தகக்கல்வி பயின்ற தமிழ் மாணவர்கள் மீது இரக்கம் கொண்டு ஆசிரியர்கள் மட்டும் என்றிருப்பதனை நீக்கி மாணவர்களும் விண்ணப்பிக்கக் கூடிய முறைகளை உடனடியாகச் செய்துதருக.

இவ் விஷயமாக பிரதமருக்கும், கல்வியமைச்சருக்கும் கோப்பாய் எம். பி. திரு. மு. பாலசுந்தரம், ஊர்காவற்துறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா, உடுப்பிட்டி எம்.பி திரு. மு. சிவசிதம்பரம், சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம், உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம், நல்லூர் எம். பி. டாக்டர் இ. எம். வி. நாகநாதன், காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், கிளிநொச்சி எம்.பி.திரு. சிவசுந்தரம்செனட்டர் ஜி. நல்லையா, 'வட்டுக்கோட்டை எம். பி. திரு.அமிர்லிங்கம் ஆகியோரும் 'அகில இலங்கை வர்த்தகமன்றத்தினரும் தந்தி அனுப்பியுள்ளனர்.

# "பஸ் நிறுத்தப்படுவதில்லை"

திருமலை, திங்கள்

தம்பலகமம் புதுக்குடியிருப்பிலிருந்து தம்பலகமம் உயர்நிலைப்பள்ளிக்கு கல்வி கற்க வரும் மாணவ மாணவிகள் பஸ்ஸை நிறுத்துவதற்குக் கை காட்டினுல் பஸ் நிறுத்தப்படுவதில்லையென்றும், இதனுல் இரண்டு மைல் தூரம் மாணவ மாணவிகள் நடந்தே செல்ல வேண்டுமென்றும் மேற்படி மாணவ மாணவிகளுடைய பெற்ருேர்கள், தம்பலகமம் உயர்நிலைப்பள்ளி அதிபர் திரு. சித்திரவேலுவைச் சந்தித்தும், கடித மூலமும் புகார்கள் கூறி வருகின்றனர். இதுசம்பந்தமாக பஸ் டிப்போ மனேஜருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

# இஸ்லாம் மதம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

"நோன்புப் பெருநாளின் சுன்னத்தான இரண்டு ரக்அத்துக்களையும் மஃமூமாக (இமாமைத் தொடர்ந்தவனாக) அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன்."

இத்தொழுகையை மஃமூமாகத் தொழுவதற்கு வாய்ப்புக் கிடைக்காவிடில் தனித்தும் தொழலாம். தனித்துத் தொழுவதாயின் மற்றத் தொழுகைகளைப்போன்றே மஃமூமன் எனும் பதர்த்தைத் தவிர்த்து நிய்யத்துச் செய்யவேண்டும்.

இந்தத் தொழுகையைத் தொழுவது (சுன்னத்து) நல்லது. விட்டுவிட்டால் பாவமில்லை. தொழுவதால் நன்மை உண்டு. எனினும் நாம் இதனைக் கட்டாயமாகச் செய்ய வேண்டும். ஏனெனில் மற்ற நாட்களில் இவ்வித தொழுகை இல்லை. பெருநாள் தொழுகை தொழுவதினுல் அப்பெருநாளை நாம் சிறப்புறச் செய்தோம் என்பதே பெருநாள். இத்தொழுகையையும் தொழுது, இரு குத்பாவைரிம் ஓதுதல் வேண்டும். இவை இரண்டுமே அந்நாளை அலங்கரிக்கின்றன. இவைமட்டுமல்லாது, இத்தொழுகையை தொழுவதற்கு முன்னுல் ஸதக்கா கொடுத்தல் தேண்டும். அதாவது இந்த சுன்னத்தான தொழுகையைத் தொழுவதற்கும், நோன்புப் பெருநாள் பிறை கண்டதற்கும் இடையில் 'சக்காதுல் பித்ரி' எனும் தானதருமம் கொடுத்தல் வேண்டும். நோன்புப் பெருநாளின் இரவுக்கும், பகலுக்கும், தனக்கும், தன்மீது சம்ரட்சணைக்குப் பொறுப்பாயுள்ளவர்களுக்கும், கடனுக்கும், மற்றும் ஆகவேண்டிய செலவுகளும் போக மீதியான ஐசுவரியமுள்ள முஸ்லிம் ஒருவன் ஸக்காத் கொடுக்கவேண்டிய எட்டுக் கூட்டத்தாருக்கும் சுமார் இரண்டு கொத்து அரிசி அல்லது ஸக்காத் விதியாகு ஐந்து பொருட்களிலும் மேற்கூறிய அளவு கொடுத்தல் வாஜிபாகும். றம்ழான் பிறை கண்டது முதலிலிருந்து இதனைக் கொடுக்கலாம். பெருநாள் தொழுகையைப் பார்க்கிலும் இதனைப் பிற்படுத்துதல் (மக்ருஹ்) ஆண்டவனுல் விரும்பத்தகாத செயலாகும்.

### நோன்புப் பெருநாள் தொழுகையைத் தொழும் விதம்

தக்பீர் கட்டி வஜ்ஜஹ்து ஓதிப் பிறகு அஊது ஓதும் முன்கையை உயர்த்தி ஏழுமுறை தக்பீர் கட்டிக்கொள்ளல்வேண்டும். ரக் அத்திலும் அஊது ஓதிக்கொள்ளும் முன்னர் கையை உயர்த்தி ஐந்து முறை தக்பீர் கட்டிக்கொள்ளல்வேண்டும். இந்த தக்பீர்களுக்கிடையில் "சுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாயிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்" எனும் அரபுத் தொடரைத் தொடர்ச்சியாக ஓதிக்கொள்ளல்வேண்டும். இந்தத் தக்பீர்களைக் கூற முன் மறதியாக ஸூரத்துல் பாத்திஹாவை ஓத ஆரம்பித்தால் இந்தத் தச்பீர்களுக்காக ஸூரத்துல் பாத்திஹா ஓதுவதை முறிக்கக்கூடாது. இமாமுடன் இத்தொழுகையைத் தொழுவதற்காக ஒருவன் போய்ச் சேரும்போது இமாம் சில தக்பீர்களைக் கூறி முடித்திருப்பாரேயானுல் எஞ்சியுள்ள தக்பீர்களை மட்டும் இமாமுடன் சொல்லல்வேண்டும்.

இன்றையிலிருந்து நம்மிடமிருந்து றம்ழான் மாதம் போய்விட்டது. அடுத்த வருடம் றம்ழான் மாதத்திற்கு இருப்போம் என்பதற்கு ஒருவித சான்றும் கிடையாது. எனவே நாம் அனைவரும் சென்ற றம்ழான் மாதத்தைப் போலவே நம் வாழ்நாளில் எஞ்சியுள்ள மாதங்களைக் கொண்டு, சுன்னத் நோன்புகளை நோற்றும், நமது நற்கிரியைகளைக்கூட்டி நற்பயனை மென்மேலும் பெறுவோமாக

# பத்திரிகை மசோதா..

(8ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு அமைந்துள்ளதாகிவே காணப்படுகிறது. தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகள் தவிர்ந்த ஏனைய பிரச்னைகளில் அவர்களிற் பலர் சிந்தனை செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஜனநாயகக் கொள்கைகளுக்கே முரணாக இருக்கும் இம் மசோதா, பத்திரிகையுலகின் கண்டிப்பை பெறும் என்பதிலும் பாராளுமன்ற எதிர்க் கட்சியினர் எல்லோரினதும் எதிர்ப்பையும் பெறும் என்றே கருதுகிறேன். பொதுமக்களும் அவர்கள் மத்தியில் உள்ள பொது ஸ்தாபனங்களும் (ஸதலஸ்தாபன சபைகள், கி. மு. சங்கம்) தங்கள் முழுமூச்சோடு இம் மசோதாவை எதிர்க்கவேண்டும். பாராளுமன்றத்தில் இம் மசோதா கொண்டுவரப்படும் போது அதனைத் தமிழரசுக கட்சி எதிர்க்கும்.

# காதி சுல்தான்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருட்டு அருளப்பட்டது அதற்கு நாங்கள் இறைவனுக்கு நன்றி செய்ய கடமைப்பட்டுள்ளோம் றம்ழான் அவர்களைவிட்டுப் பிரிவதால் முஸ்லிம்கள் துக்கமடைவார்கள் அத்துக்கத்தை நிவர்த்தித்து மக்களை மகிழ்விக்கும் பொருட்டு கொண்டாடப்படுகிறது. இந்நன்னுலில்தான் இறைவன் தன் அடியார்களுக்கு றகுமத் என்றும் கருணையை மிகுதியாக அருள்கின்ருன் இந்நன்னுளில் முஸ்லிம் எல்லோரும் ஸ்நானம் செய்து தூய ஆடை அணிந்து பள்ளிவாசல் சென்று தொழுவது மிகமுக்கியமான சுன்னத்தாகும் இந்நன்னுளில் தனவந்தர்கள் ஏழைகளுக்கு சதக்கா பித்ரு என்னும் தர்மம் கொடுக்க கடமையுள்ளவர் என நிறைவேற்ருவிட்டால் அவர்களின் நோன்பை ஆண்டவன் ஏற்றுக் கொள்ளமாட்டான் ஆதலின் ஏழைகள் மீது இரக்கங்காட்டி ஆண்டன் இட்ட கட்டளையை நிறைவேற்றி அவனுடைய அருளையும் கருணையையும் பெற்றுக் கொள்ளுவோமாக இந்தசதககர பித்ருயைப்பெருநாள் தொழுகைக்கு முன்பு கொடுப்பது மிகவும்நன்று தவறினுல் தொழுகைக்குப் பின் கொடுக்கவேண்டியது கடமை.

இந்நன்னுளில் இறைவனிடம் இந்த றம்ழான் மாதத்தின் நாங்கள் முன் பின் செய்த பாவங்களை மன்னித்தும் அனைவர்க்கும் நல்வாழ்வளித்தும் அவன் கட்டளைகளின்படி ஒழுக இறைவனை என்றும் பிரார்த்தித்து நற்சுகத்தையும் ஈந்தருளி சன்மார்க்கத்தைப்பின்பற்றிய நாலடியார்களில் நம் அனைவரையும் சேர்த்து வைக்கும் படியும் நம் தேசமககள் அனைவருககும் சுபிட்சமான வாழ்வளிககும்படியும் இறைவனை இறைஞ்சுகின்றேன். ஆமின்.

---

(ஆமீன்), கிருபையுள்ள றஹ்மான் நம்மை மனச்சாந்தி பெற்ற ஏழு கூட்டத்தாருடன் ஆக்கிவைத்து, அவனது நித்தியமான அன்பிற்கும், அருளுக்கும், கருணைக்கும் உரித்தான உத்தம சத்திய நல்லடியார்களின் கூட்டத்தில் ஆக்கியருள்வானுக!! (ஆமீன்). நாமனைவரும் இறைவனை யஞ்சி, மரண சிந்தனைசெய்து நல்லவற்றை இப்போதே புரியவேண்டும் என்ற சன்மார்க்க வைராக்கியத்தை இப்போதே செய்து செயல்பட்டு, எம்பெருமானுரின் பொருட்டால் ஏகவல்ல றஹ்மானுகிய அல்லாஹ் நமக்கு நன்னேக்கங்களையும் நற்செய்கைகளையும் நற்குணங்களையும், நல்ல மூத்திராங்க முடிபுகளையும், அவனது பேரின்ப தரிசனையைக் கண்டுகளிக்கும் பெரும் பாக்கியத்தையும் தந்தருள்புரிவானுக!!! (ஆமீன். ஆமீன். யாறப்பல் ஆலமீன்.)

—வஸ்ஸலாம்.



# மாணவர் மலர்



## பறக்கும் பாம்பு

—மகான்—

(5)

'லேக் வீதியில் ஒருவர் மாண்டு கிடக்கிருர் ஸார்!' என்ருர் கான்ஸ்டபிள் மாணிக்கம். மாணிக்கத்தின் குரலில் பயமும் ஒருவித கடமையுணர்ச்சியும் குடிகொண்டிருந்தது.

'என்ன! இன்றிரவும் ஒருவர் பலியா?' என்று கேட்டுக்கொண்டே கதிரையை விட்டெழுந்தார் இன்ஸ்பெக்டர் பிரூன்சிஸ். இன்ஸ்பெக்டரின் இதயத்துடிப்பு சிறிது அதிகரித்திருக்கிறதென்பது அவரின் முகத்திலிருந்தே தெரியவந்தது.

'இறந்தவரின் சடலம் இப்பொழுது எங்கே இருக்கிறது?' என்று கேட்டார் பிரூன்சிஸ். 'லேக்வீதி ஆரம்பமாகும் இடத்திலிருந்து பத்து அடி தூரத்தில் கிடக்கிறது ஸார்' என்ருர் கான்ஸ்டபிள் மாணிக்கம். விபரமாகக் கேட்டுக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர், ஒரு விஞடியையும் வீணுகக் கழிக்க விரும்பாமல், மேஜையிலிருந்த டெலிபோனின் 'றிசீவரை' கையிலெடுத்து நான்கு எண்களைச் சுழற்றினர்.

'ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்...' — மட்டக்களப்பு மாட வீதியிலுள்ள ஒரு வீட்டின் டெலிபோன் அலறியது.

'ஹலோ!... சி. ஐ. டி. ஷகான் பேசுகின்றேன்... ஓ... இன்ஸ்பெக்டர் பிரூன்சிஸா... என்ன இன்றும் ஒருவர் பலியா... வேண்டாம் வேண்டாம் நானே காரில் வந்துவிடுகின்றேன். ஆமாம் உடன் புறப்படுகின்றேன்' என்று டெலிபோனில் பேசினர் சி. ஐ. டி. ஷகான்.

'க்ளிக்' - சி. ஐ. டி. ஷகான், டெலிபோன் றிசீவரை வைக்கும் சத்தம் கேட்டது. இன்ஸ்பெக்டர் பிரூன்சிஸிடமிருந்து 'அழைப்பு' எதுவும் வரலாமென எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஷகான், குறிப்புப் புத்தகத்தையும், ஒளிகூடிய டார்ச் லைட்டையும் எடுத்துக்கொண்டு அவசரமாக வெளியில் வந்தார்.

ஷெட்டுக்குள்ளிருந்த ஷகானின் கார், வெளியே கொண்டு வரப்பட்டது. ஷகான் தனது காரை கூடிய வேகத்தில் செலுத்திக்கொண்டிருந்தார். 'ம்... ர்... கிரீ...ச்...' என்ற சத்தத்துடன் ஷகானின் கார் பொலிஸ் நிலையத்தின் முன் நின்றது. காரைவிட்டு ஷகான் இறங்கினர்.

கான்ஸ்டபிள் மாணிக்கம் கூறியதை, இன்ஸ்பெக்டர் பிரூன்சிஸ் விபரமாக ஷகானிடம் விளக்கினர். பின்னர் இன்ஸ்பெக்டர், ஷகான், கான்ஸ்டபிள் மாணிக்கம் ஆகியோர் லேக்வீதியை நோக்கி 'ஜீப்' ஒன்றில் சென்றுகொண்டிருந்தனர். ஷகானின் கையில் கட்டப்பட்டிருந்த விலை உயர்ந்த 'தாளுக ஓடும்' கைக்கடிகாரம் ஒருமணி பத்து நிமிடங்கள் எனக் காட்டியது.

குறிப்பிட்ட இடத்தில் 'ஜீப்' வண்டி வந்துநின்றது. ஏற்கனவே அவ்விடத்தில் காவல் பார்த்துக் கொண்டிருந்த நான்கு பொலிஸ்கான்ஸ்டபிள்மார் 'பெற்ரூேல்மாக்ஸ்' விளக்குகள் மூலம் ஒளி பரப்பிக்கொண்டிருந்தார்கள. அந்த இடத்தில் மட்டும் இருள் சிறிது மங்கியிருந்தது. இறந்துகிடந்தவரை சி. ஐ. டி ஷகானும் இன்ஸ்பெக்டர் பிரூன்சிஸும் நன்ருகப் பார்வையிட்டனர். தம்மிடமிருந்த ஒளிகூடிய டார்ச் லைட்டின் உதவியால், இறந்துகிடந்தவரை ஷகான் நன்ருக நோட்டம் விட்டார். உறுதியான உடல், வயது சுமார் முப்பது இருக்கலாம். வேட்டியும், ஷேட்டும் அணிந்திருந்தார். பார்த்தால் மிகவும் பயங்கரமான முறையில், இறந்துகிடந்தவரின் நெற்றியிலிருந்து வழிந்த இரத்தம் முகத்திலும், தலைமுடிக்குள்ளும் பரவிககிடந்தது! இறந்தவரின் முகத்தை சி. ஐ. டி. ஷகான் நன்ருகக் கவனித்தார் நெற்றியில் இரண்டு பற்கள் பதிந்த அடையாளமிருந்தது! ஆமாம்... பறக்கும் விஷப்பாம்பின் இருபற்கள் பதிந்திருந்தன! ஷகானின் குறிப்புப் புத்தகத்தில் பல வார்த்தைகள் பதிந்தன.

இதே நேரத்தில் அங்கு ஒரு 'அம்புலன்ஸ்' வண்டியும், ஒரு காரும் வந்து நின்றன. காரிலிருந்து டாக்டர் சமரவீரா இறங்கினர். அவருடன் திடீர் மரணவிசாரணை அதிகாரி சாமுவேலும் இறங்கினர். நிமிடங்கள் ஒவ்வொன்ருக மறைந்தன. பத்துநிமிடங்களுக்குப் பின்னர், அந்த இடத்தில் எவருமே நிற்கவில்லை. இறந்தவரின் உடல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

பொலிஸ்நிலையத்தில் சி. ஐ. டி. ஷகானும் இன்ஸ்பெக்டர் பிரூன்சிஸும் கதைத்துக்கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்துக்குப் பின்னர் ஷகான் அங்கிருந்து சென்றுவிட்டார். இன்ஸ்பெக்டர் பிரூன்சிஸும் பொலிஸ்நிலையத்தில் மேலும் நிற்கவிரும்பாத காரணத்தினல் தமது இல்லத்துக்குப் போகப் புறப்பட்டார. அவர் வெளியில் வந்தசமயம், இராக்காவற்காரன் ஒருவன், தனது கடமையை மறக்கவில்லையென்று ஊராருக்குத் தெரிவிக்கும்பொருட்டு, 'டாங்...டாங்...' என்று இருதடவைகள் மணி அடித்தான். நிசப்தமான அந்த நேரத்தில் ஒன்றுமே தெரியாததுபோல் மட்டக்களப்பு நகரமே உறங்கிக்கொண்டிருந்த அச்சமயத்தில், எங்கிருந்தோ ஒலித்த அந்த மணியோசை இன்ஸ்பெக்டரின் காதுகளுக்கு நன்ருகக் கேட்டது.

பறக்கும் பாம்பின் கொடிய விஷயத்துக்கு மற்றுமொருவர் பலியாகிவிட்டார். ஆனல் மாண்டவர் யார்? தினமும் இரவுவேளையில் — நடுஜாமத்தில், ஒருவர் ஒருவராக பறக்கும் பாம்புக்குப் பலியாவதென்ருல், இதன் முடிவு? இதற்கு எல்லையே இருக்காதா? கேள்விகள் மீண்டும் கேள்விக்கணைகளாகவேதான் மாறுகின்றதே தவிர விடை கிடைக்கவேயில்லை! சி. ஐ. டி. ஷகானுக்குக் கிடைத்திருக்கும் இந்த விஷப்பரீட்சையினல், ஒன்றில் அவர் புகழ்மடியும்; தவறினல் உலகப்புகழ் கிடைக்கும்! புகழ் மடிவதானல்... மட்டக்களப்பு மக்கள் பறககும் பாம்பின் கொடிய விஷத்துக்குப் பலியாகவேண்டியதுதான்!

வீட்டுக்குச் சென்ற சி ஐ.டி. ஷகானின் மனதில் என்ன இடம்பெற்றதோ தெரியவில்லை. வீட்டுக்குச் சென்றதும் சில நிமிடங்களுக்குள் அவர் நித்திரைக்குச்சென்றுவிட்டார். அவரின் அபாரமூளை எங்செங்கு எப்படியெப்படி சென்றுகொண்டிருக்கிறதென்பதை எவராலும் கண்டுபிடித்துவிட முடியாது! இரட்டைக்கொலை, மூவர் கொலை கொழும்பு வங்கித் திருட்டு, ஐம்பது லட்சம் பண மோசடி ஆகிய வழக்குகளிலெல்லாம் இலங்கை மக்களும் இலங்கையில் பிரபலம் வாய்ந்த வழக்கறிஞர்களும் பாராட்டும் வண்ணம் வெற்றி பெற்ற சி. ஐ. டி. ஷகானுக்கு, 'பறக்கும்பாம்பு' மர்மம் பெரிதாகத் தோன்ருவிட்டாலும் 'பாம்பு' என்ருல் யாரால் என்னதான் செய்யமுடியும்?

சி. ஐ. டி. ஷகானின் அடுத்த நடவடிக்கை என்ன? அவர் வெளியிடும் மர்மத் தகவல் என்ன? யாவும் விடிந்தால் தெரியும்?

# உலக விஞ்ஞானிகள்

— தென்புலோலியூர் கே. கணபதிப்பிள்ளை—

உலகத்திலுள்ள விஞ்ஞானிகளைப் பற்றியும அவர்கள் கண்டுபிடித்த பொருட்களைப் பற்றியும் அறிய வேண்டியது மாணவர்களின் கடமையாகும். எனவே, எட்டு விஞ்ஞானிகளைப் பற்றிய விஷயத்தை இங்கு தருகின்றேன் படித்துப் பாருங்கள்!

### சேர் ஹென்றிபோர்ட்

இவர் 1863-ம் ஆண்டு அமெரிக்காவில் ''கிறீன் பீல்ட்'' என்னுமிடத்தில் பிறந்தார். இவர் இளமையில் செய்த தொழில் விவசாயமேயாகும். தந்தையாருடன் சேர்ந்து தோட்டத்தில் வேலை செய்து விட்டு மிகுதி நேரத்தில் கடிகாரங்கள் யந்திரங்கள் என்பவைகளைத் திருத்தும் முயற்சியில் ஈடுபட்டார். இவர் சிறிது காலத்தின் பின்பு எடிசன் கம்பெனியில் முதலாவது எஞ்சினியரானர். இவர் ஈற்றில் ஏழு ஆண்டுகள் முயற்சியின் பின் முதன் முதலாக ''மோட்டார் வண்டியைக்'' கண்டுபிடித்தார். இவர் ஆரம்பித்த மோட்டார் கம்பெனியின் பெயர் ''போர்ட் மோட்டார் கம்பெனி''யாகும். அமெரிக்காவில் உள்ள இக்கம்பனியில் ஒரு லட்சம் தொழிலாளர் வேலை செய்கின்றனர்.

### பெஞ்சமின் பிராங்க்லின்

1706-ல் போஸ்றறன் என்னுமிடத்தில் இவர் பிறந்தார். இரண்டு ஆண்டுகளாக பாடசாலைக்குச் சென்று கல்விபயின்ற இவர் படிப்புச் செலவுக்கு வகையில்லாததால் மேலும் படிக்கவில்லை. நீந்துவதில் வல்லமை உடையவர், இவர் பன்னிரண்டாவது வயதில் அச்சுக்கோப்பவரானர். அப்பொழுது புத்தகங்கள் படிக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. தாவர உணவின் சிறப்பைப்பற்றி ஒரு பத்தகத்தில் படித்து உணர்ந்தமையால் பதினருவது வயதில் மாமிசத்தை உண்ணுது விட்டார். சிறிதுகாலம் சென்றபின் இவர் புத்தகங்கள் எழுதலானர். அரசியல்தத்துவம் என்பவைகளில் மக்கள் சிறப்படைய பலசங்கங்கள் ஏற்படுத்தினர். அமெரிக்க அடிமை நீக்கத்துக்காகப் பாடுபட்டார். மின்சாரத்தில் பல ஆராட்சிகளைச் செய்தார். இவர் கடைசியாக கண்டுபிடித்த பொருட்கள் ''இடியேறு தாங்கி புதுமாதிரியான எரியும் அடுப்பு'' என்பனவாகும்.

(அடுத்த இதழில் முடியும்)

இன்று ரம்ழான்

# விடிவெள்ளி

— மூ. ஜெயக்குமாரன் —

விடிந்ததும் றம்ழான் பெருநாள்!

அதை நினைத்தபொழுது காதருக்கு கண்களில் நீர் முட்டிவிட்டது. சென்ற வருடம் அவன் றம்ழானை கொண்டாடிய விதம் என்ன? இந்த வருடம் அவன் கொண்டாடப் போகும் விதம் என்ன?

காதரின் தந்தை அப்துல்லா கொழும்பில் ஒரு பிரபல வியாபாரி. தனது ஒரே மகனை, அப்துல்லா நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்த்து வந்தார். அவனும் காலத்தின் வேகத்தால் பதினலு வயதை எட்டிப்பிடித்தான். அன்று ஒரு நாள்!

காதரை ஈ கூட மொய்க்காதவாறு பாதுகாத்து வந்த அப்துல்லா, கைநீட்டி அடித்துவிட்டார். அடி வாங்காத காதர், அன்று அடிவாங்கியதை எண்ணி மனமுடைந்து வீட்டைவிட்டு புறப்பட்டுவிட்டான். சில நாட்களை இன்பமாகவே கழித்தான் காதர். ஆனல் கையிலிருந்த பணம் கரைந்ததும் வறுமை அவனை பற்றிக்கொண்டது. வயிற்றுப் பசிக்குகூட, வழியில்லாமல் பிறரிடம் கை நீட்டி பிச்சை கேட்கலானன். பஞ்சணையில் படுத்துறங்கியவன் இப்பொழுது சாலை ஓரங்களில் படுக்கலானன். அறுசுவை உணவு உண்டவன் இப்பொழுது அரை வயிறு, கால் வயிறு நரப்பவே பெரும் பாடுபட்டான். காலச் சக்கரம் சுழன்றது.

விடிவதற்கு இன்னும் இரண்டு, மூன்று மணித்தியாலங்கள்தான் இருந்தன. விடிந்ததும் றம்ழான். அதை நினைத்தபொழுது காதர் மீண்டும் விம்மியழலானன். ''ஒரு தந்தைக்கு ஒரு மைந்தனை அடிக்க உரிமையில்லையா? வீட்டுக்குத் திரும்பி போய்விடலாமா? திரும்பி போவதற்கு காசு...? அப்படியானல் இப்படியே கிடந்து செத்துவிடுவதா?'' அதை எண்ணி எண்ணி அவன் விம்மியழலானன். தூரத்தில் ஒரு கார் இருளைக் கிழித்தவாறே தார்ச் சாலையில் பாய்ந்துவந்தது. ''இந்தக் காருக்குள் விழுந்து செத்தால்'' என்று எண்ணிய அவன், அதை செயலாக்குவதற்கு எழுந்துவிட்டான். கார் சமீபத்தில் வந்துவிட்டது. கண்ணை மூடியவாறே பாய்ந்தான் காதர். ஆனல்அவனுக்கு கிடைத்தது ஏமாற்றம் தான். டிரைவரின் சாமர்த்தியமான பிரேக்கால் காதர் தப்பிவிட்டான்.

காரிலிருந்து இறங்கி, காதரை நோக்கிவந்தது ஒரு உருவம். ''என்ன நடக்குமோ?'' என நடுங்கினன் காதர். டார்ச் லைட்டின் பிரகாசமான ஒளி, காதரின் முகத்தை தாக்கியது. நிமிர்ந்து பார்த்தான். மறுகணம் அவன் 'அப்பா' என்று கத்தினன். ஆம்! அந்த உருவம் வேறு யாருமல்ல அவன் அப்பா தான. மறுகணம் அப்துல்லாவின் கரங்களிடையே தவழ்ந்தான் காதர். அவருடைய கண்களிலிருந்து சிந்திய நீர் காதரின் முகத்தில் வழிந்து அவன் கண்ணீரோடு கலந்தது. மறுநாள், அவன் எல்லா றம்ழான் தினத்தையும்விட, அந்த தினத்தை மிக சிறப்பாகக் கொண்டாடினன். காதரின் வாழ்வில் மீண்டும் விடிவெள்ளி முளைத்தது.

—

## உங்கள் கவனத்துக்கு!

உங்களிடமிருந்து தினமும் எமக்கு கதைகளும், கட்டுரைகளும் வந்து கொண்டிருக்கின்றன. ஆனல் எல்லாவற்றையும் ஒரே தடவையில் பிரசுரிப்பது இயலாதென்பதை உங்களுக்கு நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

கதை, கட்டுரைகளை இரத்தினச் சுருக்கமாக, தாளின் ஒருபக்கத்தில், எழுதியனுப்புங்கள். சாதரண கொப்பித்தாளின் இரண்டு அல்லது மூன்று பக்கங்களுக்குக் குறைவாக நல்ல விஷயங்களை எழுதியனுப்புங்கள். உங்களின் விடயம் இங்கு நிச்சயம் இடம் பெறும். ஆனல் பொறுமையை அனுஷ்டியுங்கள்!

'மூளைக்கு வேலை' 'சந்தேகம் தீருங்கள்' ஆகிய பகுதிகள் எங்கே என்று பலர் கேட்டெழுதி இருக்கிருர்கள். கட்டுரைகளும், கதைகளும் பிரசுரித்து அவற்றையும் இங்கு பிரசுரிக்க இடவசதியில்லை. ஆகையால், இவ்விரு பகுதிகளும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற மாதிரி வெளிவரும். உங்களின் எழுத்தார்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டே இந்த ஏற்பாடு.

## பொது மேடை

தி. குமாரசதாசிவம், ஸ்டேஷன் வீதி, சுன்னகம்: ''பறக்கும் பாம்பு நல்ல கதை. தொடர்ந்து படிக்கின்றேன். மாணவர் மலர் சிறந்த அம்சமாக விளங்கவேண்டுமென்பதே என் ஆசை.''

ஃ ஃ ஃ

பீ. ஜெயலட்சுமி, ஆர். லோகேஸ்வரி, பிரதான வீதி, திருக்கோணமலை: ''மாணவர் மலர் இப்பொழுது வெகு ஜோர். பறக்கும் பாம்பு – துப்பறியும் தொடர்கதை அற்புதமாகவும், நம்பக்கூடிய ஓர் உண்மையான நிகழ்ச்சியாகவும் இருக்கிறது. இக்கதையை தொடர்ந்து எழுதும் ஆசிரியருக்கு எங்களது நன்றிகள்.''

ஃ ஃ ஃ

எஸ். பி. ஜெயராமன், வே. விஷ்ணுசந்திரன், பரம்சோதி' சென். மத்தியூஸ் கல்லூரி' தெமட்டக்கொட, கொழும்பு' ''இலங்கைத் தினசரிப் பத்திரிகைளில்' சிறுவர் பகுதிகளில் இதுவரை வெளிவராத சிறந்த துப்பறியும் கதையான பறக்கும் பாம்பு, 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவருவதைக்கண்டு பாராட்டுகின்ருேம். கதையின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் வெட்டி வைத்திருக்கின்ருேம். எங்கள கல்லூரியிலுள்ள தமிழ் மாணவர்கள் இக்கதையை விரும்பி படிக்கின்ருர்கள்.''

ஃ ஃ ஃ

பி. எஸ். மனேகரன், வவுனியா: ''மாணவர் மலர் பகுதியில் பலருடைய கதை, கட்டுரை வெளியாவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். வளரும் எழுத்தாளருக்கு சந்தர்ப்பம் அளிக்கவும். மூளைக்கு வேலை, சந்தேகம் தீருங்கள் ஆகிய சிறந்த பகுதிகளைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றமாதிரி பிரசுரிக்கவும்.''

## வானொலி நிகழ்ச்சிகள்
### செவ்வாய் 26-2-63
### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 தாக்பீர், 7-15 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 முஸ்லிம் விசேஷ நிகழ்ச்சி, 8-45 தாக்பீர்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 வி. என். பாலசுப்பிரமணியம் — பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 இசைச் சித்திரம், 9-45 பி. எஸ். பிச்சையப்பா — நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 கூத்தநல்லூர் ஏ. எம். ஏ. ரஹீம் — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 பாலைக்காடு டி. வி. கிருஷ்ணமூர்த்தி— பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 ஈத் — உல் — பிதூர் — பேச்சு, 7-45 மன்னார்குடி கே. சாவித்திரி அம்மாள் — கோட்டுவாத்தியம், 9-15 மெல்லிசை, 9-30 'காளையார்கோயில் ரதம்' — நாடகம், 9-45 கலைச்சொல் கேளீர்.

—

## நேரு இல்லம் வெற்றி

காங்கேசன் துறை, திங்கள்

காங்கேசன் துறை நேரு விளையாட்டுக்கழக மைதானத்தில் நேரு இல்லத்திற்கும், காந்தி இல்லத்திற்குமிடையே நடைபெற்ற முதலாம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் நேரு இல்லம் 2–1 கோல்களால் வெற்றியீட்டியது.

நேரு இல்லத்திற்கும் காந்தி இல்லத்திற்குமிடையே நடைபெற்ற 2-ம்பிரிவுப் போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா இரு கோல்களைப் போட்டமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றிமுடிவுற்றது. திரு.வ. தவராஜா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

—

கிரிக்கெட்

## சென்பட்ரிக்ஸ் வெற்றி

மாவிட்டபுரம், திங்கள்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி கிரிக்கெட் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் சென்பட்ரிக்ஸ் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே மகாஜனக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட்போட்டி சென்பட்றிக்ஸ் கோஷ்டி 2 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

மகாஜனக்கோஷ்டி முதலில் துடுப்பெடுத்தாடி, முதலாவது இன்னிங்சில் 51 ஓட்டங்களைப் பெற்றது. சென். பட்ரிக்ஸ் கோஷ்டி, தனது முதல் இன்னிங்சில் 45 ஓட்டங்களைப் பெற்றது.

மகாஜன இரண்டாம் இன்னிங்சில் 51 ஓட்டங்களும், பட்ரிக்ஸ் 8 விக்கட் நஷ்டத்திற்கு 58 ஓட்டங்களும் பெற்றது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையே யூனியன் மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் ஹாட்லிக்கல்லூரி 10 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

யூனியன்கல்லூரி முதல் இன்னிங்சில் 56 ஓட்டங்களும், இரண்டாம் இன்னிங்சில் 165 ஓட்டங்களும் பெற்றது. ஹாட்லிக்கலூரி முதல் இன்னிங்சில் 166 ஓட்டங்களும் இரண்டாம் இன்னிங்சில் விக்கெட் நஷ்டமின்றி 56 ஓட்டங்களும் எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக் கிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மத்தியகல்லூரி 10 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

ஸ்கந்தவரோதய முதல் இன்னிங்சில் 127 ஓட்டங்களும், இரண்டாம் இன்னிங்சில் 55 ஓட்டங்களும் எடுத்தது. மத்திய கல்லூரி முதல் இன்னிங்சில 177 ஓட்டங்களும் இரண்டாம் இன்னிங்சில் விக்கட் நஷ்டமின்றி 6 ஓட்டங்களும் எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

## மட்டுநகர்ச் செய்தி

### இராம கிருஷ்ண ஜயந்தி

ஸ்ரீ இராமகிருஷ்ண பகவானின் 128-வது ஜயந்தி விழாவுக்கான ஏற்பாடுகள் கல்லடி உப்போடை இராமகிருஷ்ண சங்கத்திலும், கொழும்பு இராமகிருஷ்ண சங்கத்திலும் கதிர்காம இராமகிருஷ்ண மடத்திலும் செய்யப்பட்டுள்ளன.

### பரிசளிப்பு விழா

மட்டக்களப்பு வின்சன்ட மகளிர் கல்லூரி பாலர் பிரிவுக்கான பரிசளிப்பு விழா பிரஸ்தாப கல்லூரி குரெப்ற் மண்டபத்தில் நடைபெற்றது. கிழக்குப்பிராந்திய உதவி வித்தியாதிபதி திரு. இ. நாகொடவிதான, வைபவத்திற்குத் தலைமைதாங்கினர். அரசாங்க அதிபரின் பாரியார் திருமதி ரி. ஏ. எல். லுடகென்ஸ் மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினர்.

### பொன் விழா

'தமிழ் மக்களிடையே நிலவி வந்த எத்தனையோ கலைகள் தற்போது மங்கி மறைந்து போகின்றன. மறைந்து போகும் நிலையிலுள்ள கலைகளுக்குப் புத்துயிர் ஊட்டவேண்டியது நமது கடமை' இவ்வாறு மட்டக்களப்பு எம். பி. செ. இராஜதுரை, மட்டக்களப்பு மாஸ்டர் சிவலிங்கம்வில்லுப்பாட்டுக் கோஷ்டியாரின் பொன்விழா வைபவத்திற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார். வித்துவான் வி. சீ. கந்தையா திரு. ம. த. லோறன்ஸ். திரு. திமிலைமகாலிங்கம், ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர்.

### விஸ்தரிக்க ஏற்பாடு

மட்டக்களப்பு பொது வாசிகசாலையில் தற்போது நிலவும் இடநெருக்கடியை நிவர்த்தி செய்யும் பொருட்டு தற்போதைய வாசிகசாலைக் கட்டடத்தை விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகளைமேற்கொள்ளவேண்டுமென வாசிகசாலைக் கமிட்டியின் முதலாவது கூட்டததில் முடிவுசெய்யப்பட்டது. நகரசபைத் தலைவர் திரு. ஜே. எல். திசவீரசிங்கம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

### புத்தகக் கண்காட்சி

பிரிடடிஷ் கவுன்சில் பிரதிநிதி திரு. றுபட் பிராடியின் பெருமுயற்சியினல். மட்டக்களப்பில் பிரிட்டிஷ் கவுன்சில் புத்தகக் கண்காட்சியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் கல்லூரி குரெப்ற் மண்டபத்தில் நடைபெறும் இக்கண்காட்சியை மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. சி. லுடகென்ஸ் ஆரம்பித்துவைத்தார்.

சுத்தமான
பால்




நெஸ்பிரே

நிலையான புதுமை
நிர்மலமான ரகம்
நிகரிலா சிக்கனம்

பலமானது,
நலமும் பலமும் அளிக்கும்
நல்ல சமதையான ஆகாரத்தின்
ஒரு அத்தாவசியமான
அங்கமாகத் திகழ்கின்றது.

குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும்
நாளாந்தம் முழு ஆடைப்பாலைக்
கொடுத்து வாருங்கள்.

அதிமான பாலைப் பருகுங்கள்.....
முழு ஆடை நிரம்பிய நெஸ்பிரே
பவுடர் பாலை அருந்துங்கள்.




நெஸ்பிரே பாதுகாப்பான பால்



# பத்திரிகை மசோதாவை சமஷ்டிக் கட்சி எதிர்க்கும்

யாழ்ப்பாணம், செவ்வாய்
பத்திரிகை மசோதா பார்லிமெண்டுக்குக் கொண்டுவரப்பட்டால் அதைத் தமிழரசக் கட்சி எதிர்க்கும் என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ். எம். இராசமாணிக்கம் கூறினர். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாராளுமன்றக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பத்திரிகை மசோதா சட்டமாக்கப்பட்டால் இந்நாட்டில் சர்வாதிகார அமைப்பை ஏற்படுத்த சூழ்நிலை தயாராகும் என்பதில் ஐயமில்லை முன்பு நீதி மந்திரியாலும், நிதி மந்திரியாலும் தயாரிக்கம்பட்டு பாரளுமன்றக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட இரு நகல் பத்திரிகை மசோதாக்களும் அரசாங்கக் கட்சியினல் ஏற்றுக்கொள்ளப்படாதது போல, இம் மசோதாவும் தள்ளுபடியாகக்கூடும் என்பது எனது நம்பிக்அக அரசாங்கக் கட்சியிலுள்ள அனேக எம். பி. கள் பலரின் கருத்து

(5-ம் பக்கம் பார்க்க)

3-வது வெற்றி வாரம்!

ராஜா (யாழ்ப்பாணம்)
முருகன் (ஜிந்துப்பிட்டி)
நவா (கும்பனித்தெரு
ஓடியன் (கண்டி)



களிப்பூட்டும் கானங்கள் முற்றிலும் புதிய கதை.

இலட்சிய ஜோடிகள்
ராஜேந்திரன் - விஜயகுமாரி
எம். ஆர். ராதா, எஸ். வி. ரங்கராவ், எஸ். ஏ. அசோகன்

நடித்த
ராஜேந்திரன் பிக்சர்ஸ்

முத்து மண்டபம்

பாஸ்கள் சலுகைகள் ரத்து

வியாபாரம்பெருக
விளம்பரம்செய்க

## வானொலியில் வள்ளுவர் திருநாள்

யாழ்ப்பாணம். செவ்வாய்
மார்ச் மாதம் 11-ம் திகதி வண்ணை நாவலர் பாடசாலையில் நிகழும் திருவள்ளுவர் திருநாள் நிகழ்ச்சியை இலங்கை வானொலி அஞ்சல்செய்து ஒலிபரப்புவதற்குச் சம்மதித்துள்ளது.

# சிங்களப் பரீட்சை நிலையம் முன் மறியல்

## 'கோரிக்கையை மறுத்தால் நிர்ப்பந்திக்கமாட்டோம்'

—திரு. ராசமாணிக்கம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களத் தகுதிப் பரீட்சை அடுத்த மாதம் 2-ந் திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. தமிழ்ப் பகுதிகளில் இப்பரீட்சை நடைபெறும் நிலையங்களின் முன்னல் மறியல் நடத்தி சிங்களப் பரீட்சை எழுத வரும் தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பரீட்சை எடுக்காமல் திரும்பிச் செல்லுமாறு கோருவதற்குச் சிலர் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிகிறது.

சிங்களத் தகுதிப் பரீட்சை எடுப்பவர்களைப் பரீட்சை எடுக்காமல் நிர்ப்பந்திக்கும் எண்ணம் தமிழரசுக் கட்சிக்கு இல்லை என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தெரிவித்தார்.

சிங்களத் தகுதிப் பரீட்சை எடுக்கவிருக்கும் தமிழ் அரசாங்க ஊழியர்களை பரீட்சை எழுதவேண்டாமென்று தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் கோரியுள்ளதாகவும் இச்சங்கம் மறியல் நடத்தக் கூடுமென்றும் தெரிகிறது. தமிழரசுக் கட்சியிடம் தங்கள் மறியல் இயக்கத்துக்கு ஆதரவு தருமாறு அரசாங்க எழுதுவினைஞர் கேட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

### கட்சி நிர்ப்பந்திக்காது

சிங்களத் தகுதிப் பரீட்சை சம்பந்தமாக தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. இராசமாணிக்கம் பின்வருமாறு தெரிவித்தார்:-

சிலரின் நன்மைக்காக ஓரினத்தைக் குழி தோண்டிப் புதைக்கவேண்டாம் என்பதனை அரசாங்க ஊழியர்களுக்கு வற்புறுத்தியுள்ளோம். தமிழ் அரசாங்க ஊழியர்கள் தாமாகவே சிங்களம் படிப்பதா இல்லையா என்பதனை முடிவு செய்யவேண்டும்.

சிங்களப் பரீட்சை வருகிற சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. இப்பரீட்சையில் தோற்றும் தமிழ்ப் பரீட்சார்த்திகள் நமது வேண்டுகோளைப் புறக்கணித்து பரீட்சை எடுக்கும் சமயத்தில் அவர்களை நிர்ப்பந்தப்படுத்தும் உரிமை எமக்கு இல்லை.

இவ்விஷயமாக மேல் நடவடிக்கை என்ன என்பதனை தமிழரசுக் கட்சி விரைவில் பொது மக்களுக்குத் தெரிவிக்கும்.

## யாழ் மேயர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூர் எம். பி. டாக்டர் இ. எம். வி. நாகநாதன் யாழ்ப்பாணம் மேயரைச் சந்தித்து, மேயர் செய்துகொண்ட ஒப்பந்தத்தை முறியவிடாது காப்பாறியமைக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

டாக்டர் தர்மலிங்கம் தமது நிலைமையை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. எஸ். எம். இராசமாணிக்கம் ஆகியோரிடம் விளக்கமாகத் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

மேயரின் ராஜினமா இன்னும் மேலிடத்திற்கு அனுப்பப்படாதிருக்கும் அதேசமயம், மேயர் பதவிக்குப் போட்டியிட பலர் இப்போதிருந்தே ஆயத்தங்கள் செய்து வருகின்றனர்.

மேயரின் ராஜினமா இன்று அல்லது நாளை சமர்ப்பிக்கப் பட்டுவிடுமெனவும் சொல்லப் படுகிறது.

## எதிரி தரப்பு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகள் மனிதஉரிமைக்கு மாறுன சட்டங்கள் எதையும் இயற்றமுடியாதாகையால், இலங்கையும் ஒரு ஐ. நா. அங்கத்துவ நாடென்ற கோதாவில் மனித உரிமைக்குமாறுன சட்டம் இயற்றமுடியாதென்ற புதிய பிரச்னை ஒன்றை எதிரி தரப்பு வழக்கறிஞர் ஒருவர் சமர்ப்பித்தார். நீதிமன்றத்தார் இதற்குப் பதிலளிக்கையில் சர்வதேச சட்டத்தையிட்டு தாமும் மிகக்கவனம் செலுத்துவதாகவும் இந்த இடத்தில் ஐ. நா. சட்டத்தை பயன்படுத்த வேண்டுமென்பதைதாம் மறுக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.

# 'சீனவிடம் எனக்கு பயம் கிடையாது

## அதன் சவாலை எதிர்க்காமல் விடப்போவதில்லை'

— நேரு

புதுடில்லி, பெப். 25

"சீனவின் பலம் எனக்குத் தெரியும். ஆனல் சீனவிடம் எனக்குப் பயமில்லை. மரணம் என்றலும் கலங்காது எதிர்த்துப் போராடுவோம். சீனவின் சவாலை எதிர்க்காமல்விடப்போவதில்லை" என பிரதமர் நேரு ராஜ்யசபையில் ராஷ்டிரபதி உரைமீதான விவாவத்தை முடித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"கடந்த 10 ஆண்டுகளாய் சீன வளர்ச்சி பெற்றுள்ளவிதம், ஆசியாவுக்கும், உலகுக்கும் அவஸ்த்தை உண்டாக்கியுள்ளது" என்றும் அவர் கூறினர். சிக்குமின் பாதுகாப்பு இந்தியாவின் பொறுப்பு என்றும், அதை நிறைவேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாயும் நேரு கூறினர். பூட்டாலும் பாதுகாப்புக்கு உதவி கோரினல், இந்தியா உதவிக்குப் போகும் என்றர் நேரு.

வடகிழக்கு எல்லைப் பகுதிகளுக்கு அஸ்ஸாம் துப்பாக்கிப் படையையோ, அல்லது துருப்புக்களையோ இந்தியா அனுப்புவதற்குச் சுதந்திரம் உண்டு என்றும் அவர் கூறினர்.

தற்போதைய நிலையில் பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி திரு. புட்டோ, சீனவுடன் எல்லைஒப்பந்தத்தில் கையொப்பமிடச் சென்றது சரியல்ல என பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு இந்தியா தெரிவித்து விட்டதாயும், பாகிஸ்தான்– சீன எல்லை ஒப்பந்தம் எதையும் இந்தியா ஏற்கப் போவதில்லை என்றும் திரு. நேரு மேலும் தெரிவித்தார்.

நடுநிலைமைக் கொள்கையை கைவிட்டால் அது சீனவுக்கு சரணகதி அடைவதைப்போன்றது என்றும் நேரு குறிப்பிட்டார்.

## பர்மிய தேசியமயம்

### மொரார்ஜி அறிக்கை விடுவார்

புதுடில்லி, பெப். 25

பர்மாவில் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டது சப்பந்தமாக தாம் ஒன்றிரண்டு தினங்களில் ஒரு அறிக்கையை விடப்போவதாக இந்திய நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் அறிவித்தர். இதுவரை 1, 30, 20, 000 கிராம் தங்கம் தங்கப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினர்.

சதிவழக்கு விசாரணைகள் மீண்டும் நாளை நடைபெறவிருக்கிறது.

## எம். எல். ஏ மரணம்

சென்னை, பெப். 25

சென்னை கீழ் சபை அங்கத்தினர் பழனிபிள்ளை இன்று தம் குடும்பத்துடன் கோதாவரி நதியில் நீராடியபோது, மூழ்கி மரணமானர். அவருக்கு வயது 38.

## இந்தியாவுக்கு 114 கோடி யு. எஸ். உதவி

புதுடில்லி, பெப். 25

ரு. 114 கோடி உதவி ஒப்பந்தமொன்றில் அமெரிக்காவும் இந்தியாவும் இன்று கையொப்பமிட்டன.

## டீபன்பேக்கருக்கு லண்டன் கௌரவம்

லண்டன், பெப். 25

கனடா பிரதமர் டீபன்பேககருககு, இன்று லண்டன் நகர சுதந்திர பிரஜா உரிமை வழங்கப்பட்டது.

## நாஸரை சந்திக்க ஈராக் தூதுகோஷ்டி

கெய்ரோ, பெப். 25

ஈராக் உதவி பிரதமர் தலைமையில் ஒரு தூதுகோஷ்டி இன்று கெய்ரோ வந்து சேர்ந்தது. ஜனதிபதி நாஸருடன் தூதுகோஷ்டி பேச்சு நடத்தும்

வீடு வாகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு 1/2 மைல் சுற்றுவட்டாரத்துகுள் இரு குடும்பங்கள் வசதியாக வசிக்கக்கூடிய வீடு வாடகைக்கு உண்டு வாடகை ருபா 80/–விபரங்களுக்கு:–
சபாரத்தினம்,
15/1 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

3-வது வெற்றி வாரம் !

கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
விஜயா (மட்டக்களப்பு)
ராஜ் (நீர்கொழும்பு)
வெம்பிளி (கண்டி)
மொடர்ன் (பதுளை)
மற்றும் 3 திரைகளில்!



சிவாஜி கணேசன், பத்மினி, ராகினி, தங்கவேலு, டி. ஆர். ராமச்சந்திரன், பி.கண்ணம்பா, சுந்தரிபாய், எம். ஆர். சந்தானம், பக்கிரிசாமி, புளிமூட்டை ராமசாமி, காலஞ்சென்ற சாயிராம்
மற்றும் பலர் நடித்த

புனர்ஜென்மம்

பின்னணி:
சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ராஜா, திருச்சி லோகநாதன், ஜிக்கி, சுசீலா, ஜானகி, சரஸ்வதி
திரைக்கதை–வசனம் ஸ்ரீதர்
டைரக்ஷன் ஆர்.எஸ்.மணி
இசை டி.சலபதிராரவ்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
எஸ். எஸ். ஆர்., விஜயகுமாரி
நடித்த
குமுதம்

மனோகரா (யாழ்ப்பாணம்)
நாகேஸ்வரராவ் - அஞ்சலிதேவி
நடித்த
அனர்கலி

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63 ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 26-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.